Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை 19 வெள்ளிக்கிழமை (02.05.2014) பக்கங்கள் 20 ஓசை - 213

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.



# சர்வாதிகாரியாக செயற்பட்டார் புலிகளின் தலைவர் பிரபாகரன்

## மே தினக்கூட்டத்தில் விக்கி

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கேட்பார் எவரும் இன்றி சர்வாதி காரியாகச்செயற்பட்டார் என்ற தோரணையில்வடக்கு முதல்வர் சி.வி.விக் னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரியில் நேற்று இடம்பெற்ற மேதினக்கூட்டத்தில் உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு ஏற்பாடு செய்த மேதின எழுச்சிக்கூட்டம் சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற போது அங்கு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு இக்கருத்தை வெளியிட்ட போது கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. எனினும் அவர் தனது உரையைத் தொடர்ந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்களாகிய எங்களிடம் ஒற்றுமையில்லை. அதேபோல் எமது தமிழ்த் [illegible] கூட்டமைப்புக்குள்ளே [illegible] பல வித நாடகங்கள் [illegible]றுகின்றன. அவற்றின் [illegible]ணியில் சுய நலமே பெ[illegible] இருப்பதை நாம் அவதா[illegible]கலாம். சுயநலத்திற்காக வெவ்வேறு கட்சிகள்

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஆயுதக்கொள்வனவில் மீண்டும் புலிகள்
### அமெரிக்கா தருகிறது தகவல்

(வொஷிங்டன்)

கடந்த 2013ஆம் ஆண்டின்பின் புலம்பெயர் நாடுகளில் இயங்கிவரும் விடுதலைப்புலிகளின் வலையமைப்புக்களில் செயற்படுபவர்கள் ஆயுதக்கொள்வனவில் ஈடுபட்டமைக்கான வலுவான ஆதாரங்கள் உள்ளதாக அமெரிக்கா தகவல் வெளியிட்டுள்ளது.

அத்துடன் விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்ந்தும் உலகளாவிய ரீதியில் நிதி சேகரிப்பில் ஈடுபட்டுள்ளதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

வட அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட ஐரோப்பா மற்றும் ஆசிய நாடுகளில் பாரிய அளவு புலம்பெயர்ந்த மக்கள் மத்தியில் நிதி சேகரிப்பு மேற்கொள்ளப்படுவதாக அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

(19) ஆம் பக்கம் பார்க்க

## தே[illegible]தல் காலத்தில் மாவீரன் இப்போது சர்வாதிகாரியா?
### கிளம்பியது சர்ச்சை; வெளி[illegible]பறினார் விக்கி

சாவகச்சேரியில் நடைபெற்ற மேதினக்கூட்டத்தில் பங்கெடுத்து உரையாற்றிய முதலமைச்சர் விக்னேஸ்வரன விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன் தன்னிச்சையாக சர்வாதிகாரத்துடன் செயற்பட்டார் என்று பொருள்பட பேசியதால் அங்கு கூடிய சிலர் தேர்தல் காலத்தில் பிரபாகரன் மாவீரன் இப்போது சர்வாதிகாரியா என கேள்வி எழுப்பினர்.

இந்நிலையில் தனது உரையினை முடித்துக் கொண்ட பின்னர் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வெளியேற முற்படுகையில் மண்டபத்திற்கு வெளியே இளைஞர்கள் சிலர் அவரை அணுக முற்பட்டனர். நிலைமையைப் புரிந்து கொண்ட அவரது பாதுகாப்புப் பிரிவு பொலிஸார் அவசர அவசரமாக

(19) ஆம் பக்கம் பார்க்க



## [illegible]தியர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்போதனாவைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்கள் தமது சம்பள உயர்வு மற்றும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இலங்கை தாதியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் யாழ். போதனாவைத்திய சாலையின் புதிய நான்கு மாடிக் கட்டடத்திற்கு முன்பாக ஒன்று கூடியே அவர்கள் தமது போராட்

(19) ஆம் பக்கம் பார்க்க

## மாவை கலட்டி மக்களுக்கு காணித்துண்டுகள் வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு மாவை கலட்டி மக்களுக்கு காணித்துண்டுகள் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இப்பகுதியில் வாழும் குடும்பங்களில் காணியற்றவர்களுக்கு குடியிருப்பதற்காக அரச காணிகள் பகிர்ந்தளிக்கப்படும் போது முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

இதற்கான பணிப்புரையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளார்.

வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மாவை கலட்டிப் பகுதிக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அங்கு வாழும் மக்களின் அடிப்படைத் தேவைகள் உள்ளிட்ட ஏனைய விடயங்கள் தொடர்பில் நேரில் ஆராய்ந்தறிந்து கொண்டார்.

இதன்போது அங்கு தற்காலிக மற்றும் இந்திய வீடமைப்புத் திட்டத்திலும், ஏனைய வீடமைப்பு திட்டங்களிலும் வாழ்ந்து வரும் மக்களின் அடிப்படைத் தேவைகள்

(19) ஆம் பக்கம் பார்க்க

## மன்னார் தனியார் பேருந்துகளுக்கு யாழ். நகரில் தரிப்பிடம் இல்லை
### பயணிகள் சிரமம்

மன்னாரிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு சேவையில் ஈடுபட்ட தனியார் பேருந்துகளுக்கு யாழ். தனியார் பேருந்து தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டு சேவையில் ஈடுபடுவதற்கான அனுமதி வழங்கப்படவில்லை என மன்னார் தனியார் போக்குவரத்துச் சங்கத்தின் தலைவர் ரி.ரமேஸ் தெரிவித்தார்.

மன்னாரின் தனியார் போக்கு

(19) ஆம் பக்கம் பார்க்க

## யாழ். நகரில் மேதின ஊர்வலம்



(யாழ்ப்பாணம்)

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் மேதின ஊர்வலம் நேற்று மாலை மழையின் மத்தியிலும் யாழ். நகரில் இடம்பெற்றது.

கட்சியின் வடபிராந்திய செயலாளர் கா.செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் நடந்த இந்த ஊர்வலம் திருநெல்வேலிச்சந்தியிலிருந்து பிற்பகல் 3.30மணியளவில் ஆரம்பமாகி காங்கேசன்துறை வீதி வழியாக யாழ். வீரசிங்கம் மண்டபத்தை வந்தடைந்ததுடன் அங்கு பொதுக்கூட்டமும் இடம்பெற்றது.

(19) ஆம் பக்கம் பார்க்க




ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மே தின ஊர்வலம் பொரளை கெம்பல் மைதானத்தில் நேற்று மாலை 4.00 மணியளவில் ஆரம்பமாகியது.லிப்டன் சுற்றுவட்டத்தினூடாகப் பயணித்த இந்த மே தின ஊர்வலத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இணைந்து கொண்ட போது ...

உள்ளே ☞ தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வினாத்தாள்



தினமுரசு – May – 2014

# பெண் தொழிலாளர் சங்கம் யாழ். மாவட்டத்தில் உதயம்





பெண் தொழிலாளர்களுக்கான உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கிலான பெண் தொழிலாளர்கள் சங்கம் உலக தொழிலாளர் தினமாகிய நேற்று யாழில் உருவாக்கப்பட்டுள்ளது.

ஒத்துழைப்புக்கான மையத்தின் ஏற்பாட்டில் யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள தொடர்பகம் காரியாலயத்தில் நேற்று கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

இதில் வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன், தொழிலாளர் சட்டங்கள் மற்றும் உரிமைகள் தொடர்பில் கருத்துரை வழங்கினார்.

இதன்போது பெண்களிற்கான உரிமைகள் மீறப்படுகின்றமை தொடர்பில் எடுத்துரைக்கப்பட்டது. இதனையடுத்து 19 பெண் உறுப்பினர்களை உள்ளடக்கிய பெண் தொழிலாளர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இந்நிகழ்வில், ஒத்துழைப்புக்கான மையத்தின் அங்கத்தவர்கள், பெண் தொழிலாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (25)

# ஒக்ஸ்போட் கல்லூரியின் காகித விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பாரதிபுரத்திலுள்ள ஒக்ஸ்போட் கல்லூரியின் காகித விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி முதல்வர் எம்.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி வே. தபேந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக பாரதி வித்தியாலய அதிபர் பெ.கணேசன், அன்னை சாரதாதேவி வித்தியாலய முதல்வர் எஸ்.கணேஸ்வரநாதன், ஓய்வுநிலை அதிபர் அ.கனகரட்ணம், மலையாளபுர படையதிகாரி கேணல் எல்.எஸ். தயாவன்ச ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக கரைச்சி பிரதேச செயலக கிராம சேவகர்களுக்கான நிர்வாக அதிகாரி கே.மகேந்திரன், மலையாளபுர கிராம சேவகர் ம.சந்திரபாலன், மாவட்ட செயலகத்தின் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்களான திருமதி அன்பரசி அருட்செல்வம், கார்த்திகா விநாயகமூர்த்தி, கந்தசுவாமி கோயில் குருக்கள் ஜெயந்தன், வண. பிதா துரைரட்ணம், கலாபூசணம் வ. ஏழுமலைப்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (90)

# ஒருவருக்கு டெங்குத் தொற்று

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து நேற்று ஒருவர் டெங்குத் தொற்றுக்கு இலக்காகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ். குடாநாட்டில் அவ்வப்போது பெய்துவரும் மழை காரணமாக டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கக்கூடும் என்று சுகாதாரப் பிரிவினர் எச்சரித்துள்ளதுடன், அதனைத் தடுக்க ஏற்ற சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (பா)

# வீதிகளில் சிறகுவலைகளை காயவிடுவதால் அசௌகரியம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பண்ணை ஊர்காவற்றுறை வீதியில் சிறகுவலைத் தொழிலாளர்கள் தொடர்ந்தும் தமது சிறகுவலைகளை வீதியின் இரு மருங்கிலும் காயவிடுவதனால் அவ்வீதியூடாகப் பயணிக்கும் பயணிகள் அசௌகரியங்களை எதிர்நோக்குவதுடன் வீதி விபத்துக்களும் ஏற்படும் சந்தர்ப்பங்களும் அதிகமாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான நிலை குறித்து யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களப் பணிப்பாளரினால் குறித்த வீதியில் சிறகுவலைகளைக் காயவிட வேண்டாம் என்று ஊடகங்களில் அறிவுறுத்தப்பட்டிருந்தும் தொடர்ந்தும் அந்த வீதியில் காயவிடப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


அத்துடன் குறித்த வீதியின் திருத்த வேலைகளும் நடைபெற்று வருவதால் அந்தப் பகுதியில் விபத்துக்களும் ஏற்பட வாய்ப்புண்டு. எனவே சிறகுவலைத் தொழிலில் ஈடுபடும் கடற்றொழிலாளர்கள் இவ்விடயத்தில் கவனமெடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (பா)

## பணிமனை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதேச பணிமனை (ஈ.பி.ஆர்.எல்எவ்.) திறப்பு விழா நாளை மு.ப. 9.30 மணிக்கு பருத்தித்துறை வீதி, நீர்வேலியில் இடம்பெறும்.

இந்நிகழ்விற்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமை தாங்குகின்றார்.



அளவெட்டி புனித சூசையப்பர் ஆலய வருடாந்த திருவிழாவின் இறுதி நாள் நிகழ்வுகள் நேற்றுக் காலை 7.00 மணியளவில் இடம்பெற்ற திருப்பலி பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து வெளிவீதியுலா வருவதையும் காணலாம்.

# மகளிர் தின விழா

வடமராட்சி தெற்கு மேற்கு கரவெட்டி பிரதேச செயலகத்தின் சர்வதேச மகளிர் தின விழா இன்று காலை 9.30 மணிக்கு கரணவாய் மூத்தவிநாயகர் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் த.சிவஸ்ரீ தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜெயலட்சுமி இராசநாயகம், சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை நீதிமன்ற வளாக சட்ட ஆலோசகர் திருமதி மரியா சிவலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து இந்நிகழ்வில் கலை நிகழ்வுகள், சிறப்பு பட்டிமன்றம் என்பன இடம்பெறவுள்ளன. (109)

# சதுர்த்தி உற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி, நுணாவில் மேற்கு விளைவேலி மருதடிப் பிள்ளையார் ஆலய சதுர்த்தி உற்சவம் இன்று இடம்பெறுகின்றது.

காலை 10.00 மணிக்கு நவ கும்ப அபிஷேகம் இடம்பெறுவதுடன், விசேட பூசை, வசந்த மண்டப பூசை இடம்பெற்று சுவாமி உள்வீதியுலாவும் இடம்பெறும்.

இவ்விழா ஆலய பிரதம குரு தேசமான்ய து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் இடம்பெறுவதுடன், வழமைபோல் அன்னதான நிகழ்வும் இடம்பெறும். (இ)

# சடலம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

புத்தூர் பகுதியில் கிணற்றில் வீழ்ந்து இறந்ததாகத் தெரிவிக்கப்படும் வயோதிபர் ஒருவரது சடலம் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட நிலையில், பிரேத பரிசோதனைகளை அடுத்து பிற்பகல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த எம்.பசுபதி (வயது - 70) என்ற வயோதிபரின் சடலமே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2525 திகதி 30-04-2014

ஆங்கில எழுத்து: J

வெற்றி எண்கள்: 09 12 45 68

போனஸ் இல: 38

ஜக்பொட் பரிசு ரூ.13,365,325/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 218534 | 20/- | 4,370,680/- |
| 2 இல | 15561 | 100/- | 1,556,100/- |
| 3 இல | 330 | 1,000/- | 330,000/- |
| 4 இல | 2 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8671 | 40/- | 346,840/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 640 | 1,000/- | 640,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7 | 10,000/- | 70,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 13,365,325/- | - |
| 1 இல + போனஸ் இல | 10329 | 100/- | 1,032,900/- |
| 2 இல + போனஸ் இல | 495 | 500/- | 247,500/- |
| 3 இல + போனஸ் இல | 03 | 100,000/- | 300,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 425 | 200/- | 85,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 10 | 1,500/- | 15,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 2 | 150,000/- | 300,000 |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 255009 | | 11,294,020/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2014.05.03 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 13,961,275/-

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/3382)



## சிறுவிளம்பரங்கள்

### வேலைவாய்ப்பு

நிரந்தரமான தொழில், நிரந்தரமான சம்பளத்துடன் 24,000.00 - 38,000.00 வரை வருகைதரும் தினமே சேர்த்துக்கொள்ளப்படும். (உற்பத்தி பொதியிடல், மேற்பார்வையாளர்) சாப்பாடு, தங்குமிட வசதியுண்டு. 18 - 55 வரையான ஆண், பெண்களும் குழுக்களாகவும் இணைந்து கொள்ளலாம். 071 085 4068.

விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் [illegible] - 55 வரையான ஆண், பெ[illegible] தேவை. சம்பளம் 18,000.00 - 35,000.00 வரை. தங்குமிடம், உணவு, பயிற்சி வழங்கப்படும். வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள். 077 596 4299 (R/348)

### காணி, வீடு விற்பனைக்கு

சுதுமலை தெற்கில் சகல வசதிகளுடனுள்ள ஒரு வீடும், அதை அடுத்துள்ள இரண்டு சிறு வீடுகளாக்கக்கூடிய கட்டடத் தொகுதியும் விற்பனைக்குண்டு. வாங்குவோரின் வசதிக்கேற்ப சிறு சிறு பகுதிகளாகவும் விற்க முடியும். தொடர்பு : காலை, மாலையில் - க.சீவறட்ணம், சம்பந்தர் ஒழுங்கை, சுதுமலை தெற்கு. (ஏகாம்பரம் கடையடி) (R/347)

### டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள் சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3595)

# புலம்பெயர் தமிழர்களால் வழங்கப்பட்ட நிதியுதவி வடக்கிற்கு பயன்படவில்லை

## சி.ஈ.ஒ.நிறுவனத்தலைவர் குற்றச்சாட்டு

வடக்கின் அபிவிருத்தி - உட்கட்டுமானம் பல்பரிமாண சேவை எனக் கூறி புலம்பெயர் தமிழர்களால் வழங்கப்பட்ட நிதி மற்றும் உதவித்திட்டங்கள் என்பன வடக்கிற்கு பயன்படுத்தப்படவில்லை.

நிதியினை முன்னின்று சேகரிப்பவர்கள் அந்நிதியினைக் கொண்டு வேறு நாடுகளுக்குச் சென்று வீடுகளும் - ஹோட்டல்களும் தொழிற்சாலைகளும் அமைத்து சுகபோகங்களை அனுபவிக்கின்றனர் என தொழிலதிபர் வாசுதேவன் இராசையா ஆய்வு நிலையில் தெரிவித்தார்.

வெளிநாடு ஒன்றில் இருந்து வருகை தந்த சி.ஈ.ஒ.நிறுவனத் தலைவரும் சர்வதேச ஹோட்டல் தொழிலதிபருமான வாசுதேவன் இராசையா மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்னரும் போர் ஓய்வுக்குப் பின்னரும் வடக்கின் அபிவிருத்தி, உட்காட்டுமானம், வாழ்வாதார உதவி, ஊனமுற்றவர்களுக்கான உதவி எனப் பல வடிவங்களில் நிதி சேகரிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறான நிதிகளில் 3 வீதமான நிதி கூட வடக்கின் அபிவிருத்திக்கு, பயன்படுத்தாது சேகரிக்கப்பட்ட பல மில்லியன் நிதிகளுடன் சிலர் தலைமறைவாகிய சம்பவங்களே அதிகம் இடம் பெற்றுள்ளன.

வடக்கு அபிவிருத்தி அடைய அரசு பல்வேறுபட்ட அபிவிருத்திகளை முன்னெடுத்து வருவதோடு புலம் பெயர்ந்தவர்களது நிதியும் வடக்கிற்கு வந்திருந்தால் வடக்கில் ஓர் அதிசய ஆச்சரியமான பிரதேசத்தினைக் கண்டிருக்கலாம்.

இந்நிதி எமது மக்களுக்குப் பயன்படாதது மிக வருத்தமளிக்கிறது.

எனவே நிதியினை வடக்கிற்கு வழங்க விரும்புவோர் பொறிமுறை ஒன்றுக் கூடாக அல்லது தொண்டு நிறுவனங்களுக்கு நேரடியாக அனுப்பி அபிவிருத்திகளை எய்துவதுடன் பயன்தரு நிலையையும் அறியமுடியும் என்றார். (92)




வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரிக்கு கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம் சுமார் 2 1/2 இலட்சம் ரூபா பெறுமதியான அச்சுப்பதிவு இயந்திரமொன்றை அன்பளிப்புச் செய்துள்ளது. இவ் அச்சுப்பதிவு இயந்திரத்தை ஒன்றியத் தலைவர் எஸ்.பொன்னம்பலம் கல்லூரி அதிபர் திருமதி. பாலராணிஶ்ரீதரனிடம் கையளிப்பதைக் காணலாம். (01)

# "இலக்கியத்தில் சமூகப் பார்வைகளும் பதிவுகளும்" வதிரியில் நாளை நூல்வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)


ஜீவநதி வெளியீடாக இ.இராஜேஸ் கண்ணனின் "இலக்கியத்தில் சமூகப் பார்வைகளும் பதிவுகளும்" எனும் நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பி.ப. 3.15 மணிக்கு வதிரி பூவற்கரை பிள்ளையார் ஆலய ரவீந்திர சர்மா மண்டபத்தில் வதிரி தமிழ் மன்றத் தலைவர் தி.வரதராசன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் சமூகவியல் துறைத் தலைவருமான பேராசிரியர் என். சண்முகலிங்கன் கலந்து கொள்ளவுள்ளார்.

அறிமுக உரையினை யாழ்பல்கலைக் கழக சட்டத்துறைத் தலைவர் கலாநிதி தி.கலாமணி மற்றும் நூல் மதிப்பீட்டு உரையினை யாழ்ப்பாண பல்கலைக்கழக தமிழ்த் துறை சிரேஸ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் நிகழ்த்தவுள்ளனர். (63)

# மாற்றுவலுவுள்ள 6 குழந்தைகளுக்கு சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டன

மோட்டிவேசன் லங்கா நிறுவனத்தின் அனுசரணையின் கீழ் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 6 மாற்றுவலுவுள்ள குழந்தைகளுக்கு யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தினால் சக்கர நாற்காலிகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.



சுண்டிக்குளியில் அமைந்துள்ள யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தின் பிரிவுக்காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணிக்கு அதன் தலைவர் கலாநிதி திருமதி.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்ற நிகழ்விலேயே இந்தச் சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மோட்டிவேசன் நிறுவனத்தின் கொழும்பு அலுவலகத்தைச்சேர்ந்த சுதர்சன் யாழ். போதனாவைத்தியசாலை குழந்தைகள் வைத்தியர் கீதாஞ்சலி ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு சக்கரநாற்காலிகளை அதிகாரிகளுடன் இணைந்து வழங்கி வைத்தனர்.

மேலும் இவ்வாறு மொத்தம் பதினைந்து பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சக்கரநாற்காலிகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதுமட்டுமன்றி மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளை வீடுகளுக்குள்ளேயே முடக்கி விடாமல் அவர்களை வெளியே கொண்டு சென்று அவர்களை வளர்ச்சிப்பாதைக்கு இட்டுச்செல்ல வேண்டும் என்பதனை நோக்கமாகக் கொண்டே இந்த உதவி வழங்கப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (பா)

# சேனாதி அண்ணையின் "காணேல்ல" வசூல் புராணம்...



'கிளிநொச்சியில் யுத்தகாலத்தில் இருந்த குடும்பங்களில் பலதைக் காணவில்லை. 13 ஆயிரம் பேருக்கு என்ன ஆச்சு?' எண்டு 'சேனாதி அண்ணை' கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில ஒரு 'கேள்விக்குண்டை'த் தூக்கிப் போட்டவரெல்லோ...!

சேனாதி அண்ணை போட்ட 'குண்டை' அப்பிடியே காவிக்கொண்டு போய்த் தங்களின்ரை பேப்பரிலயும்'கொட்டை' எழுத்தில தலைப்புச் செய்தியாகப் போட்டவை சில பேப்பர்காரர்..

இந்தச் செய்தியைப் படிச்சவைக்கு ஒரு கலக்கம்.... அட இவ்வளவு சனத்துக்கும் என்ன நடந்தது எண்டு ஒரே குழப்பம்....

'யுத்தத்தில் அவ்வளவும் செத்துப்போச்சுதுகளாக்கும்!' எண்டு காதுக்குள்ள குசுகுசுத்தவையும் 'அப்பிடித்தானிருக்கும்' எண்டு ஆமாப்போட்டவையுமாக ரண்டு நாள் ஒரே அமர்க்களம்.

**இந்த மாதிரி எதையாவது தூக்கிக் குண்டாக வெடிக்க வைக்கிறதில இந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்காரருக்கு ஈடாக இந்த ஈரேழு லோகத்திலயும் ஆருமில்லை.**

கிளிநொச்சியில் நடந்தது மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டம். அதில பேசவேண்டியிருந்த விசயங்கள் ஏராளம் இருந்தன.

ஆனால், அதொண்டைப்பற்றியும் சேனாதி அண்ணை கதைக்கேல்ல.

இருந்தாற்போல எதையோ நினைச்ச மாதிரி, கிளிநொச்சியில இருந்த குடும்பங்களில கனபேரைக் காணேல்லை எண்டு சேனாதி அண்ணை குண்டைப்போட... அதைப்பற்றியே கதையாகிப்போச்சு... அண்ணைக்குத் தெரியும், பேப்பரில வாற மாதிரிக் கதைக்க வேணும் எண்டால், அதுக்கு என்ன செய்ய வேணும், என்ன மருந்தைக் குடுக்க வேணும் எண்டு.

ஆனால், சேனாதி அண்ணை, சேத்துக்குள்ள நிண்டு கொண்டெல்லோ கல்லெறிஞ்சு பார்த்திருக்கிறார்.... அவர் எறிஞ்ச கல்லு அவற்றை முகத்திலதான் சேத்தைப் பூசியிருக்கு....

கிளிநொச்சியில மட்டுமில்ல வன்னியிலயே முந்தி ஏராளம்பேர் இருந்தது உண்மைதான். அதில போரில ஒரு தொகுதிச் சனங்கள் பலியானதும் உண்மைதான். மிஞ்சியிருந்த சனங்களில கொஞ்சப்பேர் யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் வவுனியாவுக்கும் திருகோணமலைக்கும் மட்டக்களப்பு – அம்பாறை எண்டும் போட்டினம்.

முந்தி அந்தப் பக்கமெல்லாம் இருக்கேலாது எண்டு கிளிநொச்சியில இருந்தவை. இப்ப அந்தப் பிரச்சினை ஒண்டும் இல்லை எண்டவுடன தங்கட தங்கட சொந்த இடங்களுக்குப் போயிட்டினம்...

இன்னும் கொஞ்சப்பேர், படகேறி அவுஸ்ரேலியாவுக்குப் போட்டினம்.

இதைவிட இன்னும் கொஞ்சப்பேர், பிச்சையும் வேண்டாம் நாயும் வேண்டாம் எண்டு சொல்லிக்கொண்டு 'வெளியில' – புலம்பெயர்ந்து போயிட்டினம். இவை வெளியில போறதுக்கு முழுசாக ஒத்துழைப்பைக் குடுக்கிறது இந்தச் சேனாதி அண்ணைதான்...

'இஞ்ச நாட்டில பெருங்குழப்பம். பெடி பெட்டையள் இருக்கேலாது. ஒருதருக்கும் பாதுகாப்பில்லை.... இன்னார் தேடப்படுகிறார். இன்னார் கடத்தப்பட்டுத் தப்பியோடி வந்தவர்....'

இப்பிடிக் கடிதம் எழுதி எழுதி கனபேரைக் கப்பலேற்றினவர்தான் இந்தச் சேனாதி அண்ணை. அவர் மட்டுமில்ல, இந்த மாதிரி ஊரில இருக்கிற பெடி, பெட்டைகளுக்கெல்லாம் கடிதம் குடுத்துக் குடுத்து வெளியில அனுப்பிறதே தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்காரரின்ரை தொழிலாய்ப்போச்சு.

இதில அவைக்கு நல்ல வருமானம். இஞ்சயும் சில பேரிட்ட இந்தக் கடிதத்துக்குக் காசு வாங்கலாம். தேர்தல் வந்தால் இந்தக் கடிதம் வாங்கினதுக்காக வாக்கும் போடுவினம். பிறகு அங்க வெளிநாடுகளுக்குப் போகேக்க, இஞ்ச கடிதம் வாங்கின பெடியளை மடக்கிப் பிடிச்சு அங்கயும் கறக்கலாம்...

எல்லாம் தொழில்தான்.

இப்பிடியெல்லாம் செய்து கொண்டு பிறகு கிளிநொச்சியில இருந்தவனைக் காணேல்ல, சாவகச்சேரியில நடந்தவனைக் காணேல்ல, சங்கானையில படுத்தவனைக் காணேல்ல எண்டால்... ஆருக்குத்தான் சிரிப்பும் சினமும் வராது.

ஆனால், தாங்கள்தான் இப்பிடி 'கள்ளக்கடிதம்' குடுத்து வெளியில பெடி பெட்டைகளை அனுப்பிறது எண்டதை 'ஆள்' வலு சோக்கா மறைச்சுப்போட்டு, வெளியில ஒரு 'சுருள் சுத்தை' விட்டிருக்கிறார்.

**'மாவை அண்ணைக்கு ஏன் இந்த வம்பில போன வக்கிரக்குணம்?'** எண்டு பெடியள் கேக்கிறாங்கள்...

**'அது தம்பி, அவர் பிறந்த பலனோ ராசியோ அப்பிடி இல்லைத் தம்பி, அவர் செய்கிற காரியங்களும் அவர் இருக்கிற இடமும்தான் அப்பிடி'** எண்டு சேனாதி அண்ணையைப் பற்றி பழமும் திண்டு, கொட்டை போட்ட பெரிசுகள் சொல்லுதுகள்.

**அப்ப சேனாதி அண்ணை முழுப்பூசினிக்காயை சோத்துக்குள்ள மறைக்கிறார் எண்டு சொல்லுங்கோ...**

நல்லாயிருக்கடாப்பா, இப்பிடியே ஒண்டும் தெரியாத பாப்பாக்களைப் போல நடக்கிறதிலயும் நடிக்கிறதிலையும் சேனாதி அண்ணையிட்ட **'நடிகர் திலகம் சிவாஜி கணேசன்'** கூடத் தோற்றுப்போவார்.

அப்ப இதை நம்பிற சனங்கள்?

அவை எப்பவும் போல இவைதான் எங்கட காத்தற்கடவுள்கள் எண்டு சொல்லிக் கொண்டு கண்ணை மூடிக்கொண்டும் காதைப் பொத்திக்கொண்டும் இருக்க வேண்டியதுதான்.

ஆனால், எல்லாப் புலனும் இழந்த மக்கள் நாங்கள் எண்டு நாளைக்கு வரலாறு சொல்லும். இதைத்தான் 'புலன்பெயர்ந்த' மக்கள் எண்டார்களோ!

விழிப்புடனிருங்கள். உங்கள் விரலிடுக்கில் கூட வாய்ப்புகள் நழுவிப் போகும். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## கூட்டமைப்பும் குழுச்சண்டையும்!

திருகோணமலையில் இடம்பெற்ற தமிழ் தேசிய கூட்டமைப்பின் கூட்டத்தல், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முயற்சியில் தீர்வுத் திட்டத்தை உருவாக்குவது பற்றியோ, மாகாண சபையை செயல்படுத்தி அதிகாரங்களை மேம்படுத்துவது பற்றியோ எதுவும் உரையாடப்பட்டதாக செய்தியில்லை.

தென்னாபிரிக்கா மத்தியஸ்தத்துடனான தீர்வு மற்றும் இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் பங்களிப்பை பெறுவது என்பவற்றோடு அடுத்து எதிர்நோக்கவுள்ள தேர்தல் தொடர்பாக ஆராய்ந்து செயற்படுவதற்கு, ஒரு குழுவை நியமித்துள்ளதாக அறிவித்துள்ளனர் அவ்வளவுதான்.

குழுவானது எதிர்காலத்தில் தமிழ் மக்களின் தீர்வு தொடர்பாக சுதந்திரமாகவும் அர்ப்பணிப்புடனும் செயற்படும் என்று குறிப்பிடப்பட்டாலும் கூட்டமைப்பைக் கட்சியாகப் பதிவு செய்வது சம்பந்தமாக அவர்களுக்குள் பலகாலமாக நிலவிவரும் குத்துவெட்டுக்களுக்கெனவே குழு அமைக்கப்பட்டதாக தெரிகிறது.

மற்றபடி அவர்களுடைய குழுச்சண்டைதான் ஜரூராக நடந்திருக்கிறது. கட்சித் தலைமையின் அனுமதியின்றி அனந்தி சசிதரன் ஜெனீவா சென்றமை பற்றிய அமளியே பெருமளவு நேரம். வட்டுக்கோட்டைத் தொகுதியில் அடுத்த எம்.பி எலெக்‌ஷனுக்கு அனந்தி நிறுத்தப்பட்டுவிடக் கூடாது என்று பராதிப்படுபவர்களின் ஆவேசப் பேச்சுதான் அதிகம்.

ஒருவர் கடந்த முறை நியமன எம்.பியாகத் தேர்வானவர். மற்றவர் பத்திரிகையை வைத்தே அடுத்த தேர்தலிலும் எம்.பியாகிவிடும் கனவிலிருப்பவர். இருவரும் எதிர்பார்க்கும் பிரதேசத்தின் வாக்குகளை அனந்தி களவாடி விடக்கூடும் என்பதே இருவரினதும் பதைபதைப்பு.

அனந்தியை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கட்சியை நோக்கித் தள்ளிவிட்டு, அடுத்த தேர்தலில் தோற்கடித்துவிடும் இவர்களின் முயற்சியினிடையே அனந்தி அழுதவாறு உரையினை நிறுத்தி அமர்ந்துவிட்டார். இவ்வளவும் நடந்து கொண்டிருந்த போது பெரும்பாலான கூட்டமைப்பு தலைமைகள் மௌனம் காத்திருந்தமை குறிப்பிடத்தக்கத

இந்த லட்சணத்தில் தமிழ்க் கூட்டமைப்பை பிளவுபடுத்த அரசு சதி என்றும் தலைவர் சம்பந்தன் எதற்கும் இருக்கட்டுமே என்பதாக ஒரு காமெடி வெடியையும்கொளுத்திப் போட்டிருக்கிறார். சுரேசோ சித்தார்த்தனோ அனந்தி வகையறாக்களோ எதிர்காலத்திலும் முரண்டுத்தனமாக ஏதாவது பேசினால் அரசாங்கத்துடன் இணைந்து சதி செய்கிறார்கள் என்று சொல்லிவிடலாம். கப்பென்று அடங்கிவிடுவார்கள். எவ்வளவு வசதி!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொய்மைத்தனங்களையார் பேச முற்[illegible]லும் அது அரசாங்கத்தின் கூட்டமைப்பைப் பிளக்கும் திட்[illegible]ற்குத் துணைபோவதாகும் என்று கூறிவிட்டால்... பிற[illegible]டமைப்புக்கு எ[illegible]ராக வாய்திறக்கிறவர்கள் எல்லோரும் அ[illegible] சார்பானவர்கள் துரோகிகள் என்பது சொல்லாமலே மக்[illegible]ளுக்குத் தெரிந்துவிடும்.

இப்படியே இவர்கள் கட்டமைத்துக் க[illegible]ம் எதிரி நாட்டரசின் பாராளுமன்றக் கதிரைகளிலும் போ[illegible]க் குந்திக்கொண்டு, மாகாண உள்ளூராட்சி சபைப் பதவிகளையும் பிடித்துக்கொண்டு, அவரவர் சொந்த சம்பளங்கள் வசதி சலுகை வாகன வாய்ப்புக்களையும் ஒன்றுவிடாமல் கேட்டுப் பெற்றுக்கொண்டு....

அதேசமயம் –

மக்களின் பிரச்சினைகளுக்காகவோ அல்லது அவர்களுக்கு வேண்டிய வாழ்வுத் தேவைகளுக்காகவோ ஒட்டுமொத்த அரசியல் தீர்வுக்காகவோ அரசாங்கத்துடன் பேசலாமே என்று சொல்பவர்களைப் பார்த்து, "தமிழ் மக்களின் எதிரியான இந்த அரசாங்கத்தை சர்வதேசம் தண்டிக்கத் தயாராகி வருகையில் இந்தத் தமிழ்த் துரோகிகள் எதிரி அரசைக் காப்பாற்றிவிடத் துணை போகிறார்கள்" என்று முழங்கும்தமிழ்வீர அரசியலைத் தொடரலாம்.

அரசாங்கத்தைக் கவிழ்த்துவிடலாம், சர்வதேச விசாரணையில் தண்டித்து விடலாம் என்று யார் சொன்னாலும்தான் நம்பி வாக்களித்துவிட்டுக் காத்திருக்க தமிழ்மக்கள் இன்னமும் கூட தயாராயிருக்கிறார்களே!

- ஆசிரியா

# புலம்பெயர் அமைப்புகள் தடை; நல்லிணக்கத்தைப் பாதிக்கும்

## என்கிறது கனடா

புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீது இலங்கை அரசாங்கம் விதித்துள்ள தடையானது நல்லிணக்க முனைப்புக்களை மேலும் பாதிக்கும் என கனடா அறிவித்துள்ளது. 16 புலம்பெயர் அமைப்புக்களையும், 424 தனிப்பட்ட நபர்களையும் இலங்கை அரசாங்கம் தடை செய்துள்ளது. இந்த விடயம் குறித்து கவனம் செலுத்தி வருவதாக கனேடிய அரசாங்கம் அறிவித்துள்ளது. இலங்கை அரசாங்கத்தின் தடை கனடாவில் பாதிப்பை ஏற்படுத்தாது என தெரிவித்துள்ளது.

தடை செய்யப்பட்ட அமைப்புக்கள் மற்றும் தனிப்பட்ட நபர்கள கருதததுககளை வெளியிட கனடாவில் எவ்வித தடையும் கிடையாது என அறிவித்துள்ளது. எவ்வாறெனினும், இந்தப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ள கனேடியர்களிடம் கேள்வி எழுப்பப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. யுத்தத்தின் பின்னரான நல்லிணக்க முனைப்புக்களில் புலம்பெயர் தமிழ் மக்கள் முக்கிய பங்காற்றி வருவதாக கனேடிய வெளிவிவகார அமைசசர் ஜோன் பெயார்ட் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்திற்கு எதிரான சகல நடவடிக்கைகளும் சர்வதேச சட்டங்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் இலங்கை அரசாங்கம் எடுக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு என அவர் குறிப்பிட்டுள்ளார். சகல விதமான பயங்கரவாத செயற்பாடுகளையும் கனடா எதிர்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

# நீதவான் முன்னிலையிலேயே மதுவரி அலுவலரை தாக்கமுயற்சி

சாவகச்சேரி நீதவான் முன்னிலையில் சாவகச்சேரி மதுவரித் திணைக்கள அலுவலரினை தாக்க முற்பட்ட நபரை எதிர்வரும் 12 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதவான் சிறிநிதி நந்தசேகரம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டதுடன் வழக்கு விசாரணையினை 22 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

சாவகச்சேரி கெருடாவில் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு எதிராக கசிப்பு வைத்திருந்ததாக சாவகச்சேரி மதுவரி நிலையத்தினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது குறித்த நபருக்கு அபராதம் விதித்து நீதவான் தீர்ப்பளித்தார்.

இந்நிலையில் அடுத்த வழக்கினை எதிர்பார்த்து நீதவான் காத்திருந்தபோது மதுவரித் திணைக்கள அலுவலரை, கசிப்பு வைத்திருந்த நபரின் உறவினர் தாக்க முற்பட்டதுடன் கொ[illegible] எச்சரிக்கையும் விடுத்துள்ளார்.

இதனை நேரடியாக அவதானித்த நீதவான் குறித்த நபரைக் கைதுசெய்து வழக்கும் பதிவு செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

நீதிமன்றினை அவமதித்தமை, அரச அலுவலரை கடமை செய்யவிடாமல் தடுத்தமை, அரச அலுவலருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்தமை போன்ற குற்றங்கள் மேற்படி நபர் மீது சாட்டப்பட்டுள்ளன.

# பேருந்து கட்டண திருத்தத்தில் 20 வீத அதிகரிப்பு வேண்டும்

## பஸ் உரிமையாளர் சம்மேளனம் கோரிக்கை

(கொழும்பு)

பஸ் தொழிற்துறையை நடத்துவதற்கு போதியளவிலான வருமானம் கிடைக்கப்பெறாமையால் எதிர்வரும் யூலை மாதம் இடம்பெறவுள்ள பஸ் கட்டண திருத்[illegible]த்தில் கட்டாயமாக 20 சதவீத [illegible]ட்டண அதிகரிப்பு இடம்பெற வேண்டும் என அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்களின் சம்மேளன செயலாளர் அங்ஜன பிரியங்ஜித் தெரிவித்தார்.

இந்தக்கட்டண அதிகரிப்புக்கமைய ஆகக் குறைந்த கட்டணமான ஒன்பது ரூபா, 10 ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பஸ் கட்டண திருத்தத்தில் அவதானிக்கப்படும் 12 காரணிகளில் ஒன்றான டீசல் விலை அதிகரிப்பானது கடந்த சில காலங்களில் இடம்பெறாத போதிலும் ஏனைய 11 காரணிகளும் நூற்றுக்கு 200 முதல் 300 வரை அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, நடைமுறையில் 14 சதவீத பஸ் கட்டண அதிகரிப்பு தேவைப்படுவதாக கணக்கிடப்படுகின்றது. எவ்வாறாயினும், கடந்த வருட பஸ் கட்டண திருத்தத்தில் 12 சதவீத கட்டண அதிகரிப்பு கணக்கிடப்பட்டிருந்த போதிலும் 6 சதவீத அதிகரிப்பே மேற்கொள்ளப்பட்டது.

எஞ்சிய 6 சதவீதத்துக்கு நிவாரணம் வழங்குவதாக ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவை உறுதியளித்த போதிலும் அந்த உறுதி செயற்படுத்தப்படவில்லை என அங்ஜன பிரியங்ஜித் சுட்டிக்காட்டினார்.

இதனால், இம்முறை கட்டண அதிகரிப்பு திருத்தத்தில் 20 சதவீத கட்டண அதிகரிப்பு கட்டாயம் இடம்பெற வேண்டும் என அவர் மேலும் கூறினார்.

# அலுவலகத்திறப்புவிழா

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமராட்சி அலுவலக திறப்புவிழா இன்று பிற்பகல் 4.00மணிக்கு மூத்த விநாயகர் கோவிலுக்கு முன்பான பிரதான வீதி நெல்லியடியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

எஸ்எக்ஸ்குலநாயகம தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர். மாவை சேனாதிராஜா கலந்துகொள்ளவுள்ளார். அத்துடன் சிறப்பு விருந்தினர்களாக கூட்டமைப்பின் அரசியல் பிரமுகர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (18)

# மதவிவகாரத்திற்கு பொலிஸ்பிரிவு உகந்ததல்ல எனத்தெரிவிப்பு

(கொழும்பு)

மத விவகாரங்கள் குறித்து ஆராய விசேட பொலிஸ் பிரிவு அமைக்கப்பட்டுள்ளமையானது உகந்த செயற்பாடு அல்ல என அஸ்கிரிய பீடத்தின் மெதகம தம்மானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

புத்தசாசன அமைச்சின் கீழ் இந்த விசேட பிரிவு அமைக்கப்பட்டுள்ளமை, இலங்கையில் மதப் பிரச்சினையை ஏற்படுத்தும் என அவர் சுட்டிக் காட்டினார்.

கண்டியில் ஊடகவியலாளர்களை சந்தித்து பேசியபோதே தம்மானந்த தேரர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கையில் மதங்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து விசாரணை செய்ய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தரவின்படி இவ் விசேட பொலிஸ் குழு அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புலிகளின் வெளிநாட்டுக் கட்டமைப்புக்கள் மீது கண் வைத்துள்ள அரசாங்கம்





**வே.அர்ச்சுனன்**

விடுதலைப் புலிகள் 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் யுத்தத்தைத் தொடர்ந்து இலங்கையில் முற்றுமுழுதாக இல்லாமல்செய்யப்பட்டனர். இரு தரப்பிலும் பெருமளவானோர் கொல்லப்பட்டதுடன் யுத்தமும் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. கடந்த 30 ஆண்டு காலமாக இலங்கையை ஆட்டிப் படைத்துவந்த புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகளுக்கு மகிந்த ராஜபக்ஷ் தலைமையிலான அரசாங்கம் முற்றுப்புள்ளி வைத்த போதிலும் புலம் பெயர்ந்த நாடுகளில் விடுதலைப் புலிகளின் கட்டமைப்புகள் அதன் செயற்பாடுகள் என்பன தொடர்ந்த வண்ணமே இருக்கின்றது.

இலங்கையில் யுத்தம் முடிவுக்கு வந்த கையுடன் விடுதலைப் புலிகளின் முக்கியமான போராளிகள் உள்ளிட்ட பலர் கைது செய்யப்பட்டு இலங்கைப் படையினரால் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு சமூகத்தோடு இணைக்கப்பட்டுள்ளனர். ஆனால் மோதல் இடம் பெற்றபோது மக்களோடு மக்களாக வெளியேறிய பல போராளிகள் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்று புலிகளின் செயற்பாடுகளுக்கு வெளிநாடுகளில் புத்துயிர் அளிக்க முனைந்து வருகின்றனர்.

இதை ஒடுக்கும் முயற்சியிலும் இலங்கை அரசாங்கம் வெற்றி பெற்றே வருகிறது. குறிப்பாக புலித் தலைமை அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து புலிகளின் புதிய தலைவராக தன்னை வெளிநாடுகளில் பிரகடனப்படுத்திய கே.பி எனப்படும் குமரன் பத்மநாதனை இலங்கை அரசாங்கம் விரைவாகவே கைதுசெய்தது. இதனைத் தொடர்ந்து புலிகளின் செயற்பாடுகள் ஓரளவுக்கு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

ஆனாலும் வேறுசிலர் புலிகள் அமைப்பை உயிர்ப்பிக்கும் செயற்பாடுகளில் தொடர்ந்தும் ஈடுபட்டனர். குறிப்பாக நெடியவன், விநாயகம், உருத்திர குமாரன், தமிழ்நெற் எனும் இணையத்தளத்தை நடாத்தி வரும் ஜெயா என அழைக்கப்படும் ஜெயாதரன் மற்றும் முன்னாள் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயானந்த மூர்த்தி, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பொறுப்பாளராகிய காத்தாமுத்து, றெஜி போன்றோர் புலிகள் இயக்கத்திற்கு வெளிநாடுகளில் புத்துயிர் கொடுத்து செயற்பட்டு வருகின்றனர்.

இவர்களில் முக்கியமானவரான நந்தகோபன் என அழைக்கப்படும் கபிலன், புலிகளின் பிரசார ஒருங்கிணைப்பின் முக்கிய சூத்திரதாரியாக வெளிநாடுகளில் இருந்து செயற்பட்டு வந்தார். இறுதி யுத்தத்தின் போது படுகாயம் அடைந்த இவர் இலங்கையில் இருந்து வெளியேறி மலேசியாவை தளமாகக் கொண்டு செயற்பட்டு வந்தார். இலங்கை தனது புலனாய்வு செயற்பாட்டை வெளிநாடுகளில் விரிவுபடுத்தியதன் காரணமாக மலேசிய பொலிஸாரின் உதவியுடன் இலங்கைப் புலனாய்வுத் துறையினரால் நந்தகோபன் கைதுசெய்யப்பட்டார்.

இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இவரிடமிருந்து பல தகவல்களை இலங்கை அரசு பெறுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சர்வதேச பொறுப்பாளராகவும் புலிகளின் சர்வதேச ஊடகங்களின் செயற்பாடுகளை முழுமையாக தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்து செயற்படுத்தி வந்த கஸ்ரோ என அழைக்கப்படும் மணிவண்ணன் என்ற விடுதலைப்புலிகளின் மூத்த தளபதியின் கீழிருந்து 3ஆம் நிலையில் செயற்பட்டு வந்தவரே இந்த கபிலன் எனப்படும் நந்தகோபன் ஆவார்.

வெளிநாடுகள், மற்றும் வெளிநாடுகளில் உள்ள புலிகளின் செயற்பாடுகள் போன்றனவற்றை கண்காணிக்கும் பொறுப்பு தமிழ்ச்செல்வனின் மைத்துனரான திலீபன் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்தத் திலீபன் இறுதி யுத்தத்தில் காணாமற் போனமை குறிப்பிடத்தக்கது.

3ஆம் நிலையில் செயற்பட்டுவந்த நந்தகோபன், விடுதலைப் புலிகளின் ஊடகச் செயற்பாடுகள், புலிகளின் இணையத் தளங்கள், புலிகளிற்கு நிதியுதவி வழங்குவோர்களின் நடவடிக்கைகள் என்பனவற்றை நெறிப்படுத்தி வந்தார். குறிப்பாக ஊடக அறிக்கைகளை வெளியிடுவது அரசாங்கத்திற்கு எதிரான பேரணிகளை வெளிநாடுகளில் ஒழுங்குபடுத்துவது உள்ளிட்ட செயற்பாடுகளை நந்தகோபன் மேற்கொண்டு வந்தார்.

கே.பி.யையும், தயா மாஸ்ரரையும் அரசாங்கம் எவ்வாறு கையாண்டதோ அவ்வாறே தற்போது கைது செய்யப்பட்டுள்ள நந்தகோபனையும் அரசாங்கம் கையாளுவதாக கூறப்படுகிறது. விசாரணைகள் பூர்த்தியாகின்ற நிலையில் நந்தகோபனின் செயற்பாடுகள் அரசாங்கத்திற்கு சார்பான நிலைப்பாட்டில் இருக்குமென ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். சிலவேளைகளில் அரசாங்கத்திற்கு சார்பான தமிழ் ஊடக வலைஅமைப்பு ஒன்றை கிளிநொச்சியிலோ அல்லது யாழ்ப்பாணத்திலோ நந்தகோபனை வைத்து நிறுவுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

இவ்வாறு நந்தகோபனின் விடயம் முடிவுக்கு வந்துள்ள நிலையில், புலிகளின் இன்றைய வெளிநாட்டுச் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கும் தலைவராகக் கருதப்படும் நெடியவன் மற்றும் தமிழர் புனர்வாழ்வு கழகத்தைச் சேர்ந்த காத்தாமுத்து றெஜி ஆகியோரை கைதுசெய்வதே அரசாங்கத்தின் அடுத்த முக்கிய இலக்காக உள்ளது.

நெடியவன் மீதான நடவடிக்கைக்கு இன்டர்போல் உதவ முன்வந்துள்ளது. நோர்வேயில் இருந்து செயற்பட்டு வரும் நெடியவனை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை இன்டர்போல் முடுக்கிவிட்டிருக்கிறது. இதற்குத்தேவையான உதவிகளை வழங்குவதற்கு நோர்வே அரசு இப்போது முன்வந்துள்ளதாகவும் அதற்கான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் கொழும்பில் இருந்து வெளிவரும் திவயின நாளிதழ் தகவல் வெளியிட்டிருக்கிறது.


நோர்வேயில் தற்போது இருப்பதாகக் கூறப்படும் நெடியவன் என்ற சிவ-பரனை கைது செய்து இலங்கைக்கு கொண்டு வருவது தொடர்பில் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்த உள்ளதாக நோர்வே இராஜாங்க செயலாளர் மோரன் ஹென்லபட் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது. நெடியவன் பயங்கரவாதத்திற்காக நிதி திரட்டியுள்ளதாக நெதர்லாந்து பொலிஸார் உறுதிப்படுத்தி உள்ளனர். இதுதொடர்பாக 6000 ஜிகாபைட் இரகசிய தகவல்களை நோர்வே அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ள நெதர்லாந்து பொலிஸார், கோனிக் என்ற நடவடிக்கையின் கீழ் நெடியவன் நிதி திரட்டிய விதம் பற்றி அறிந்து கொண்டதாக மேலும் தெரிவித்துள்ளனர்.

நெடியவனின் சகாக்களான கோபி, தேவியன், அப்பன் ஆகியோர் அண்மையில் கொல்லப்பட்டுள்ளனர். இவ்வாறு அரசாங்கம் தற்போது வெளிநாடுகளில் உள்ள புலிகளின் செயற்பாட்டாளர்கள் மற்றும், புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் மீது தனது பார்வையை செலுத்தியுள்ளது. அரசாங்கத்தின் இப்பார்வையில் இருந்து, வெளிநாடுகளில் செயற்படும் புலிகளின் தளபதிகள் தப்புவதற்கான வாய்ப்புகள் இல்லை என்றே சொல்லலாம்.

நெடியவன், றெஜி, ஜெயானந்த மூர்த்தி, ஜெயா போன்றவர்கள் விரைவில் கைதுசெய்யப்பட்டு இலங்கைக்கு கொண்டுவரப்படுவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் முழு அளவில் முடுக்கிவிட்டுள்ளதாக ஆய்வாளர்கள் எழுதுகின்றார்கள்.

# பிதா சிலிமான்பிள்ள யோசப் இமானுவேல்

**கமெலியா நாதானியேல் கட்டுரையிலிருந்து**



வெளிப்படையாகவும் மற்றும் மறைமுகமானதுமான ஒரு ஆதரவு கட்டமைப்பு இல்லாமல் பயங்கரவாதம் நீடித்திருக்க முடியாது. விடுதலைப் புலிகள் இயக்கம் நீடித்து நின்றது எதனாலென்றால் அது பெற்ற ஆதரவு மற்றும் வெறுப்பின் பரவலையும் மற்றும் வன்முறை நடத்தையையும் பார்வையாளர்களாக அவதானித்துக் கொண்டிருந்தவர்களினதும் தயவினால்தான். எல்.ரீ.ரீ.ஈ யினது ஒரு முக்கிய ஆதரவாளரும் அதன் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஒரு ரசிகனாகவும் இருந்த பிதா சிலிமான்பிள்ள யோசப் இமானுவல், பிரபாகரனின் மரணத்துக்குப் பின்னர் அதன் தலைமைக் கவசத்தை ஏற்றுக் கொண்டுள்ளார். ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை பிரேரணை 1373 யின் கீழ் (யு.என்.எஸ்.சி.ஆர்) தடை செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ள நான்கு முன்னணி எல்.ரீ.ரீ.ஈ குழுக்களில் ஒன்றான உலகத் தமிழர் பேரவை (ஜி.ரீ.எப்) பிதா இமானுவேல் அவர்களால் வழி நடாத்தப்படுகிறது.

பிதா இமானுவேல் 1990 களில் எல்.ரீ.ரீ.ஈயின் ஒரு பின்பற்றுபவராக ஆவதற்கு முன்பு வரை மதகுருமார்கள் மற்றும் சமூகத்தினரிடையே ஒரு மதிப்பு மிக்க அங்கத்தவராகத் திகழ்ந்தார். நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் எண்ணம் கொண்ட மதகுருமார்கள், பிதா இமானுவேல் பிரபாகரனை யேசு கிறிஸ்துவுக்கு ஈடாகவும் மற்றும் தற்கொலைக் குண்டுதாரிகளை தியாகிகளுக்கு ஈடாகவும் சமப்படுத்தியபோதே அவரிடமிருந்து வெகுதூரம் செல்ல ஆரம்பித்து விட்டார்கள். எல்.ரீ.ரீ.ஈ கொலைகள், குண்டுத் தாக்குதல்கள் சித்திரவதைகள், மற்றும் இனச்சுத்திகரிப்பு என்பனவற்றை மேற்கொண்டிருக்கும் கால கட்டத்தின்போதே பிதா இமானுவேல் அதன் ஆதரவாளராக இருந்தது மட்டுமன்றி இன்றுவரை இலங்கையை துண்டாடும் நோக்கத்துக்காக வேலை செய்து வருகிறார்.

ஆதரவு மற்றும் வன்முறைகளுக்கு புத்துயிர் அளிக்கும் முயற்சிகளைத் தடை செய்யும் வகையில் ஐக்கிய இராச்சியத்தை தலைமையகமாக கொண்டியங்கும் ஜி.ரி.எப் மற்றும் அதனைச் சார்ந்த குழுக்கள் என்பன 20,மார்ச் 2014இல் பயங்கரவாத அமைப்புகளாக பிரகடனப் படுத்தப்பட்டன.

பிதா இமானுவேல் பயங்கரவாதம் தொடர்பான குற்றங்களுக்கு இளைஞர்களை அணிதிரட்டி அதற்கு ஆதரவாக வாதிடவும் மற்றும் அதில் ஈடுபடத்தக்கதுமான அரசியல் மயமான தீவிரம் நிறைந்த ஒரு சித்தாந்தத்தை அவர் உருவாக்கினார். எல்.ரீ.ரீ.ஈ ஒரு பயங்கரவாத இயக்கமாக கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டதும் அதன் ஆதரவு குறைவடைந்தது அப்போது அதன் சர்வதேச வலையமைப்பின் பகிரங்க முகத்தோற்றமாக பிதா இமானுவேல் மாறினார். எந்த பயங்கரவாத இயக்கமும் தோற்றமடையவும் அபிவிருத்தி அடைந்து உயிர்வாழவும் இயலுவது அதன் ஆதரவாளர்களின் பலம், அதிகாரம் மற்றும் செல்வாக்கு என்பனவற்றால் மட்டுமல்ல அதன் பாதுகாவலர்கள், ஆதரவாளர்கள், மற்றும் அனுதாபிகள் ஆகியோரிடையே உள்ள வளங்கள் காரணமாகவும்தான். பிதா இமானுவேல் எல்.ரீ.ரீ.ஈ இலட்சியத்தில் உறுதியாக இருந்தார்.

பிரான்சிலுள்ள ஈழமுரசு ஆசிரியர் குழுமத்தினால் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 50ஆவது பிறந்த நாளை கொண்டாடும் முகமாக நவம் பர் 2004இல் பிரசுரிக்கப்பட்ட "விடுதலைப்போர்" எனும் புத்தகத்தில் பிதா இமானுவேலால் எழுதப்பட்ட "புதிய தமிழ் தேசத்தின் தலைவரும் மற்றும் சிற்பியுமானவருக்கு தலை வணங்குகிறேன்" எனும் கட்டுரை காணப்படுகிறது.

பிதா இமானுவேல் நன்றாகப் பேசக் கூடியவரும் சகலராலும் மதிக்கப்படும் ஒருவராக இருப்பதால், வெளிநாட்டிலுள்ள ஆங்கிலம் பேசத் தெரியாத எல்.ரீ.ரீ.ஈ தலைவர்கள், அரசியல் தலைவர்கள், அரசாங்க அதிகாரிகள் மற்றும் மனித உரிமை அமைப்புகள் என்பனவற்றை இணங்கச் செய்வதற்கு இவரிலேயே தங்கியிருக்க வேண்டியிருந்தது. மே 2009இல் எல்.ரீ.ரீ.ஈக்கு ஏற்பட்ட தோல்வியில் இருந்து ஒரு மறுவரவை ஏற்படுத்த பிதா இமானுவேல் மிகவும் முக்கியமான பங்கினை வகித்தார்.

# நாட்டில் பயங்கரவாதத்தை மீளவும் உருவாக்க முயற்சி

## விமான சேவைகள் அமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பல்வேறு வழிகளில் மீளவும் பயங்கரவாதத்தை தலைதூக்கச் செய்ய முயற்சிக்கப்படுவதாக சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

கருவலபெத்த பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

பல்வேறு அர்ப்பணிப்புக்களுக்கு மத்தியில் பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டது. அதனை




வெவ்வேறு வழிகளில் மீளவும் தலைதூக்கச் செய்ய முயற்சிக் கப்படுகின்றது.

உள்நாட்டு பயங்கரவாதத்திற்கு பதிலாக வெளிநாட்டு பயங்கரவாதம் தலைதூக்கியுள்ளது.

இந்தச் சவால்களை புரிந்து கொண்டு அதற்கு எதிராக செயற்படக் கூடிய ஆற்றல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிற்கு காணப்படுகின்றது.

நாட்டில் பலஹீனமான ஆட்சியிருந்திருந்தால் இப்போது இந்த நாடு நமக்குச் சொந்தமாகியிருக்காது.

நாட்டில் பிரச்சினைகள் இல்லாமல் இல்லை. எந்தவொரு ஆட்சியிலும் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

பிரச்சினைகளின் போது வெளிநாட்டு சக்திகளுக்கு அடிபணிந்து கோழைகளாக செயற்பட்டால, எதிர்கால சமூகம் நம்மை நிந்திக்கும்.

எல்லாக் காலங்களிலும் நாட்டை காட்டிக்கொடுக்கும் தரப்பினர் வாழ்ந்து வந்துள்ளனர். அவ்வாறானவர்கள் தற்போதும் இருக்கின்றார்கள்.

தற்போதைய வரலாறு எழுதப்படும் போது இவ்வாறான துரோகிகள் பற்றியும் எழுதப்படும். கடும்போக்குடையவர்கள் எதனைச் சொன்னாலும் தேர்தல்களின் போது மக்கள் ஜனநாயகத்தை விரும்புகின்றமை புலனாகின்றது என அமைச்சர் பிரியங்கர ஜயரட்ன மேலும் தெரிவித்துள்ளார்.

# குருநாகல் ரயில் விபத்து ஐவர் பணி இடைநிறுத்தம்




(கொழும்பு)

குருநாகல் பொத்துஹெர பிரதேசத்தில் இடம்பெற்ற ரயில் விபத்துத் தொடர்பில் ஐவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைகள் நிறைவடையும் வரை, பளை ரயில் எஞ்சின் சாரதி, அவரது உதவியாளர், பாதுகாவலர், சமிக்ஞை கட்டுப்பாட்டாளர் மற்றும் பொத்துஹெர ரயில் நிலைய பொறுப்பதிகாரி ஆகிய ஐவர் இவ்வாறு பணி இடைநீக்கம் செய்யப்பட்டதாக ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் குறிப்பிட்டுள்ளது.

# வழிபாட்டுத் தல நிர்மாணம் அனுமதி பெறுவது கட்டாயம்

## மத விவகார அமைச்சு அறிவிப்பு



பௌத்த மற்றும் மத விவகாரங்கள் அமைச்சின் அனுமதியின்றி எதிர்காலத்தில் நாட்டில் எந்தவொரு வழிப்பாட்டுத் தலங்களையும் ஆரம்பிக்க முடியாது என அமைச்சின் செயலாளர் எம்.கே.டி. திஸாநாயக்க தெரிவித்தார்.

புதிய மக்கள் குடியேற்றங்கள் ஏற்படும் இடங்களில் வணக்க ஸ்தலங்களும் ஏற்படுத்தப்படுவது வழமை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் 20 ஆயிரம் வழிபாட்டுத் தலங்கள் உள்ளன. அவற்றில் 10 ஆயிரம் பௌத்த வழிபாட்டுத்தலங்கள்.

புதிய குடியேற்றங்கள் ஏற்படுத்தப்படும் போது வழிபாட்டுத் தலங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன.

சட்டத்திற்கு அப்பால் சென்று மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைகளினால் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

நாட்டு மக்கள் தாம் விரும்பியபடி தமது மதங்களைப் பின்பற்றும் உரிமை இருக்க வேண்டும் எனவும் திஸாநாயக்க மே…ம் கூறியுள்ளார்.

# தாய்மையற்ற நிலையில், 8 இலட்சம் சிங்களப் பெண்கள்

## பொதுபல சேனா கவலை

(கொழும்பு)

இலங்கைக்குள் செயற்பட்டு வரும் அரச சார்பற்ற நிறுவனமொன்றினால் கடந்த 10 வருட காலப்பகுதிக்குள் சிங்கள பௌத்த மதத்தைச் சேர்ந்த 8 இலட்சத்து 90ஆயிரம் பெண்கள் குழந்தைப் பேறற்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என பொது பல சேனா அமைப்பு குற்றஞ்சாட் டியுள்ளது.

உலக சனத்தொகையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் 1973 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்த "தங்கமான சிறிய குடும்பம்" என்ற வேலைத்திட்டத்தை மையமாகக் கொண்டே மேற்படி அரச சார்பற்ற நிறுவனத்தினால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் பொது பல சேனா குறிப்பிட்டது.

இந்தக் காலப்பகுதிக்குள், கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்களில் 1.5 சதவீதமானோர் வேறு மதங்களுக்கு மதமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவ்வமைப்பு கூறியது.

இது தவிர்ந்த, கொழும்பு மாவட்டத்திலுள்ள சிங்கள பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்களில் ஒன்றரை இலட்சம் பேரும் மத்திய கிழக்கில் வேலை வாய்ப்பு பெற்றுச்சென்றவர்களில் 80 ஆயிரம் பேரும் ஒட்டுமொத்த இலங்கையர்களில் இலட்சக் கணக்கானோரும் மதமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் வண. கலகொட அத்தே ஞானசாரதேரர் தெரிவித்தார்.

# வடக்கில் பாலியல் துஷ்பிரயோகம் 17 படையினர் மீது நடவடிக்கை

## இராணுவம் தெரிவிப்பு



யுத்தம் நடைபெற்ற 2007 முதல் 2009 ஆம் ஆண்டு வரையும் போர் முடிவடைந்த 2009 முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலத்தில் வடக்கில் இடம்பெற்ற பால…பல் வல்லுறவுச் சம்பவங்கள…ன் தொடர்புடைய 17 இராணு… …னருக்கு எதிராக சட்ட நடவ……கை எடுக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

2007ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரை வடக்கில் இடம் பெற்ற 119 பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் தொடர்பில் 125 பேருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதில் 5 சம்பவங்களுடன் 7 இராணுவத்தினர் சம்பந்தப்பட்டுள்ளனர்.

அதேபோல் 2009ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டு வரையான காலத்தில் 256 பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் நடந்துள்ளதுடன், சம்பவங்கள் தொடர்பில் 307 பேருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதில் 6 சம்பவங்களுடன் இராணுவத்தினர் சம்பந்தப்பட்டுள்ளதுடன், 10 பேருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளன.

2007ஆம் ஆண்டு முதல் 2013ஆம ஆண்டு வரை வடக்கில் 1000 பெண்களுக்கு ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். நாட்டின் மேல் மாகாணத்துடன ஒப்பிடும் போது இது 0.7 வீதமாகும். அதே வேளை இதே காலப்பகுதியில் வட மத்திய மாகாணத்தில் ஆயிரம் பெண்களுக்கு இருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த புள்ளிவிபரங்களின் அடிப்படையில் பார்த்தால், அதிகளவில் வடக்கில் பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் நடப்பதாக கூறுவது உண்மைக்குப் புறம்பானது. அத்துடன் பாலியல் வல்லுறவுச் சம்பவங்களுடன் தொடர்புடைய இராணுவத்தினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை வடக்கில் பாடசாலை கல்வி நடவடிக்கைகளில் இராணுவத்தினரால் தடையேற்படுத்தப்படுவதாக சில வெளிநாட்டு ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்திகளில் எவ்வித உண்மையுமில்லை எனவும் இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கோபி உட்பட மூ…ர் கொலை இராணுவ அதிகாரிகள் கௌரவிப்பு



(கொழும்பு)

கோபி, அப்பன் மற்றும் தேவிகன் ஆகிய மூவரும் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தில் திறமையாகச் செயற்பட்ட இராணுவ அதிகாரிகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு மீள உயிர்கொடுக்க முனைந்தவர்கள் என்று குற்றம் சாட்டி, தேடப்படுவதாக புலனாய்வுப் பிரிவினரால் அறிவிக்கப்பட்ட இவர்கள் மூவரும், ஒரே நேரத்தில் தப்பிச்செல்ல முயன்றபோது சுட்டுக்கொல்லப்பட்டதாக இராணுவம் அறிவித்தது.

இச்சம்பவம் கடந்த ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி நெடுங்கேணி, வெடிவைத்தகல்லு காட்டுப் பகுதியில் இடம்பெற்றது.

இந்த நிலையில், மூவரும் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தில் திறமையாகப் பணியாற்றிய இ… …வ அதிகாரிகளுக்கு, சிறப்பு …ருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கை இராணுவத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வில், இராணுவத் தளபதி இந்த விருதுகளை வழங்கினார்.

வன்னிப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா, சிறப்புப் படைப்பிரிவின் பிரிகேட் தளபதி பிரிகேடியர் ஆர்.எம்.வை.ஜே.ரத்நாயக்க, இராணுவப் புலனாய்வுப் பணிப்பாளர் கேணல் ரி.எஸ்.சாலி, 2 ஆவது சிறப்புப்படைப் பிரிவின் கட்டளை அதிகாரி லெப்.கேணல எம்.பி.கே.எல்.அமரசிங்க, லெப். டி.எம்.திசநாயக்க, கோப்ரல் தினேஸ் குமார, கோப்ரல் ஜெயசிங்க, கோப்ரல் கமகே ஆகிய எட்டுப் பேருக்குமே இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

# பாதுகாப்பான நாடாக மாறியுள்ளது இலங்கை

## அரசாங்கம் தெரிவிப்பு



விடுதலைப் புலிகளை தோற்கடித்து போரை முடிவுக்கு கொண்டு வந்த பின்னர், உலகில் உள்ள பாதுகாப்பான நாடாக இலங்கை மாறியுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் வன்வேள்ட் எயார்லைன்ஸுடன் இணையும் நிகழ்வில் நேற்றுமுன தினம் கலந்து கொண்டு பேசிய அமைச்சர் சரத் அமுனுகம இதனைக் கூறி யுள்ளார்.

உண்மையான சமாதானத்தை நாடு தற்பொழுது அனுபவித்து வருகிறது. இலங்கையில் ஏற்பட்டுள்ள சமாதானத்தின் பலனாக மத்தள விமான நிலையம் நிர்மாணிக்கப்பட்டதுடன், பல புதிய அதிவேக நெடுஞ்சாலைகள் திறக்கப்பட்டுள்ளன.


சுற்றுலாப் பயணிகள் அம்பாந்தோட்டைக்கு விஜயம் மேற்கொள்ள வேண்டும் எனவும் அங்கு வந்து சுற்றுலா மற்றும் முதலீட்டுத் துறைகளில் இருக்கும் வாய்ப்புகள் பற்றி ஆராய்ந்து பார்க்க வேண்டும் எனவும் அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

போருக்குப் பின்னரும் இலங்கை இன்னும் பாதுகாப் பான நாடாக மாறவில்லை என சில நாடுகள் தமது பயண ஆலோசனைகளை தொடர்ந்து வருகின்றன எனவும் அமைச்சர் அமுனுகம மேலும் தெரிவித்துள்ளார்.

மக்கள் அறிந்து கொள்ள வேண்டிய முக்கிய விடயங்கள்

# குடாநாட்டின் நீர்வளமும் குடிநீருக்கான தேவையும்

**யாழ் குடாநாட்டின் நிலத்தடி நீரின் (விவசாயம் மற்றும் குடிநீர்) தற்போதைய இருப்பு**
**மாரியில் – 34,960 கன மீ/நாள் கோடையில் – 13,100 கன மீ/நாள்.**
**தற்போது தேவைப்படும் குடி நீரின் அளவு 50,000 கன மீ/நாள்**




**குடாநாட்டின் குடி நீர்த் தேவை**

| தற்போதைய சனத்தொகை | 2028 ம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் சனத்தொகை | 2028ல் சராசரி நாளுக்கான தேவை |
|---|---|---|
| 607,158 | 926,116 | 88,500 கன மீற்றர் |

குடாநாட்டு நீர் பற்றாக்குறையாகவும், மாசடைந்தும் காணப்படுவது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மற்றும் நீர் வளச் சபையினால் விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, அயல் மாவட்டத்திலிருந்து நீர் கொண்டு வருதலே இதற்குரிய தீர்வாகும்.

## யாழ் குடாநாட்டில் தற்போதுள்ள குடிநீர் விநியோகம்

- யாழ் குடாநாட்டில் 1950ம் ஆண்டுகளிலிருந்து சிறியளவிலான குடிநீர் வழங்கல் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் ஒரு மணித்தியால குடி நீரைக் கூட வழங்க முடியாதுள்ளதுடன் அத்திட்டங்களை விஸ்தரிக்கவும் முடியாதுள்ளது.

## யாழ் நீரின் தன்மை

- அதிகமான இரசாயன பாவனை காரணமாக நிலத்தடி நீரின் நச்சுத்தன்மை அதிகரித்து வருகின்றது.
- அளவுக்கு அதிகமான நீர்ப்பாவனையினால் நிலத்தடி நீர் குறைந்து உப்பாகி வருகின்றது.
- நகரப்பகுதியில் ஒழுங்கற்ற மலசலகூட அமைப்புக்களினால் நிலத்தடி நீர் பாதிப்படைந்து கிருமித்தொற்று அதிகமாகியுள்ளது.

## ஆறுமுகம் திட்டம் எனப்படும் 'யாழ்ப்பாணத்திற்கான ஆறு' திட்டம் பற்றிய விளக்கம்

### திட்டத்தின் சாதக நிலைகள்

- இத்திட்டம் கடல் நீரால் ஏற்படும் உவர்தன்மையைக் குறைக்கும்.
- கடனீரேரியை அண்டிய உவர் நிலப்பகுதி விவசாயத்திற்கு ஏற்புடையதாக மாறும்.
- வீணாகப் போகும் நன்னீரை சேமிப்பதன் மூலம் நீண்டகாலத்தற்கு நிலத்தடி நீர் இருப்பை உறுதிப்படுத்தும்.

### திட்டத்தின் பலவீனங்கள்



- நகர, தீவக குடியிருப்புக்கான குடிநீர்த் திட்டத்திற்கு பொருத்தமானதல்ல.
- ஆனையிறவு கடனீரேரி நன்னீராகும் போது அதில் தங்கியுள்ள உயிரினங்கள் பாதிப்படையும் அத்துடன் இந் நீரேரியை நம்பி வாழும் மீனவக் குடும்பங்கள் பாதிக்கப்படும்.
- சூழல்தொகுதி பாதிப்படைய வாய்ப்புள்ளது.
- அதிக பரப்பும் ஆழம் குறைந்த தன்மை காரணமாகவும் கோடை காலத்தில் நீரின் சேமிப்பு கேள்விக் குறியாகும்.
- திட்டத்தை பயன்படுத்தி நிலத்தடி நீரை மேம்படுத்த நீண்டகாலம் தேவை.



குடிநீர் வழங்குவது பொதுநலக் கடமை!
நன்னீர் பெறுவது தனி மனித உரிமை!



## யாழ் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திடம்

**மொத்த திட்ட செலவு : ரூபா 2,300 கோடி**


திட்டப் பயனாளிகள்:

| | |
|---|---|
| குடி நீர் வழங்கல் | - 300,000 பேர் (யாழ் கிளிநொச்சி மாவட்டங்களில்) |
| கழிவகற்றல் சுகாதாரம் | - 80,000 பேர் (யாழ் மாநகர சபை பகுதியில்) |
| நீர்ப்பாசனம் | - 55,000 பேர் (கிளிநொச்சி விவசாயிகள்) |

இத்திட்டத்தினூடாக கிளிநொச்சி யாழ் மக்களுக்கு சுத்தமான குடி நீரை வழங்குவதை உறுதிப்படுத்துவதுடன் கழிவு நீரகற்றும் திட்டத்தையும் செயற்படுத்தி நிலத்தடி நீரினைப் பேணுவதுடன் கிளிநொச்சி மக்களின் விவசாய வாழ்வாதாரத்தையும் வளப்படுத்துவோம்!

**திட்டப் பணிப்பாளர் காரியாலயம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, யாழ்ப்பாணம்**

# ஒலிம்பிக் ஏற்பாடுகள் கவலையடையும் பிபா



எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு பிரேசில் நாட்டின் ரியோ டி ஜெனீரோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளின் ஏற்பாடுகள் குறித்து சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளது.

இதுவரை நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளுக்கான ஏற்பாடுகளைப் பார்க்கும்போது ரியோ போட்டிகளுக்கான ஏற்பாடுகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன என்று சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனத்தின் துணைத் தலைவர் ஜோன் கோட்ஸ் தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலியாவில் ஒலிம்பிக் போட்டிகள் தொடர்பாக நடைபெற்ற ஒரு மாநாட்டில் உரையாற்றிய போதே ஜோன் கோட்ஸ் இதைத் தெரிவித்துள்ளார். ஒலிம்பிக் போட்டிகளுக்கான பல வளாகங்களில் இன்னும் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கவே இல்லை என்றும் ஆரம்பமான சிலவற்றிலும் பணிகள் திட்டமிட்டபடி முன்னேறவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.


குறிப்பாக டியோடோரோ நகரில் எட்டு விதமான விளையாட்டுக்கள் நடைபெறவுள்ள ஒலிம்பிக் பூங்காவில் இன்னும் கட்டுமாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவே இல்லை என்றும் ஜோன் கோட்ஸ் கூறுகிறார்.

ஆனால் ரியோ போட்டிகள் குறித்து இவ்வளவு கவலைகளும் விமர்சனங்களும் இருந்தாலும் போட்டிகளை வேறு நாட்டுக்கு மாற்றுவது குறித்த திட்டமேதும் ஒலிம்பிக் சம்மேளனத்திடம் இல்லை எனவும் அவர் உறுதியாகத் தெரிவித்துள்ளார். ரியோவில் நிலைமைகள் நெருக்கடியான ஒரு சூழலில் இருந்தாலும் போட்டிகளுக்கான ஏற்பாடுகளை விரைவுபடுத்த ஐ.ஓ.சி. நடவடிக்கை எடுத்து வருகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

# வன்னியின் போர் இன்று ஆரம்பம்



புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி



கிளிநொச்சி மகாவித்தியாலயம்

(கிளிநொச்சி)


வன்னியின் போர் என வர்ணிக்கப்படுகின்ற கிளி-முல்லை நட்புறவுக் கிண்ண இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி இன்று நண்பகல் 12.00 மணிக்கு கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மகாவித்தியாலயம் மற்றும் புதுக் குடியிருப்பு மத்திய கல்லூரி அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் இப்போட்டி போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் இடம்பெறும் இரண்டாவது ஆட்டமாக அமையவுள்ளது.


போர் நடைபெற்றுக்கொண்டிருந்த காலப் பகுதியில் இரண்டு முறை இப்போட்டி நடாத் தப்பட்டது. இந்நிலையில் நான்காவது ஆண்டாக நடைபெறவுள்ள இப்போட்டித் தொடரில் இரு அணிகளும் ஒவ்வொரு வெற்றியைப் பதிவு செய்துள்ளன. ஒரு போட்டி சமநிலையில் நிறைவுற்றுள்ளது.

இந்நிலையில் நான்காவது போட்டியில் இரு அணிகளும் தமது பலத்தைப் பிரயோகித்து வெற்றியைப் பதிவு செய்ய இறுதி வரை போராடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (93,29)

# நட்புறவுக் கிண்ண நண்பர்களின் சமர் இன்று



முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி



கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்

(முள்ளியவளை)

முல்லைத்தீவு - முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மற்றும் யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணிகளுக்கிடையிலான நண்பர்களின் சமர் என வர்ணிக்கப்படுகின்ற இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி இன்று பிற்பகல் 1.00 மணிக்கு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் நட்புறவுப் பாலத்தை உருவாக்கம் நோக்குடன் கடந்த ஆண்டு இத்தொடர் ஆரம்பிக்கப்பட்டது.

இத்தொடரின் முதல் போட்டியில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி வெற்றிவாகை சூடியது. இந்நிலையில் இரண்டாவது போட்டி இன்றும் நாளையும் வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணிக்கு கலைச்செல்வனும், முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணிக்கு அஞ்சயனும் தலைமை தாங்குகின்றனர்.

வெளிமாவட்டங்களில் சிறப்பான திறனை வெளிப்படுத்தி வரும் வித்தியானந்தாக் கல்லூரி அணி, சொந்த இடத்தில் வெற்றியைப் பெற்றுக் கொள்ள கடும் பிரயத்தனம் செய்யும் என அதன் ஆதரவாளர்களால் நம்பப்படுகின்றது. இதே வேளை, கடந்த ஆண்டு பெற்ற வெற்றியை தக்க வைத்துக்கொள்ளும் வகையில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணியின் கள வியூகம் அமையும் என அதன் ஆதரவாளர்களால் நம்பப்படுகின்றது. இந்நிலையில் பரபரப்புக்கு குறைவில்லாத ஓர் ஆட்டமாக இது அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (எஸ்.பி.)

# ஐ.பி.எல். துளிகள்

வட்சன் அற்புதமான கப்டன். பல விதங்களில் அவர் ராகுல் ராவிட் கப்டனாக இருந்தது போன்றே செயற்படுகிறார். வட்சன், களத்தில் அமைதியானவர். அதேபோன்று முடிவுகளையும் பதற்றமின்றி சீக்கிரம் எடுக்கிறார். நெருக்கடியான சூழலிலும் சட்டென்று சரியான முடிவுகளை மேற்கொள்ளும் திறமை இருவரிடமும் உண்டு. ராகுல் ராவிட் ஓய்வு பெற்று விட்டதால் ஆரம்ப வரிசையில் இறங்கும் எனக்கு கூடுதல் பொறுப்பு இருப்பதாக உணர்கிறேன். கூடுதல் பொறுப்பை நான் மிகவும் விரும்புகிறேன். ஏனெனில் அது தான் என்னை கடினமாக உழைக்க வைப்பதுடன், ஒரு கிரிக்கெட் வீரராக முன்னேற உதவிகரமாக இருக்கிறது.

**ரஹானே (ராஜஸ்தான்)**

சரிவில் இருந்து மீள்வதற்கான நேரம் இது. தொடர்ந்து 3 ஆட்டங்களில் தோற்றுப் போனது எங்களுக்குப் பெரும் பின்னடைவு என்பதில் சந்தேகம் இல்லை. இதில் இருந்து நாங்கள் விரைவில் எழுச்சி பெறுவது அவசியம். டெஸ்ட் மற்றும் ஒரு நாள் கிரிக்கெட் போன்று ருவென்ரி 20 போட்டி கிடையாது. இந்த வடிவிலான கிரிக்கெட்டில் வெற்றியோ தோல்வியோ குறுகிய நேரத்தில் மாறிவிடும். சொந்த ஊரில் (பெங்களூர்) போட்டிக்கு முன்பாக இரண்டு நாட்கள் ஓய்வு கிடைக்கிறது. அதற்குள் நாங்கள் புத்துணர்ச்சி பெற்று, சக்தியை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும். சரிவில் இருந்து மீள்வது சொந்த ஊரில் கொஞ்சம் எளிதாக இருக்கும் என்று நம்புகிறேன்.

**யுவராஜ்சிங் (பெங்களூர்)**


அடுத்து வரும் போட்டிகள் இந்திய மண்ணில் நடைபெறவுள்ளதால் பெங்களூர் நாங்கள் எழுச்சி பெற்று வெற்றிப் பாதைக்கு திரும்புவோம் என்ற நம்பிக்கை உள்ளது. இன்னும் நிறையப் போட்டிகள் மீதம் இருப்பதால், வீரர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயற்படுவோம்.


**கிறிஸ் கெய்ல் (பெங்களூர்)**

தொடர் தோல்விகள் எங்களைப் பாதித்துள்ளதை ஏற்றுக்கொள்கிறோம். தாயகத்தில் நடைபெறும் போட்டிகளில் அதிக கவனம் செலுத்தி வெற்றியைப் பதிவாக்கிக் கொள்ள முயற்சிப்போம். ஹைதராபாத் அணிக்கெதிரான போட்டியில் பொலாட் இறுதி வரை போராடியது சிறப்பானது. ஆனால், அவர் களத்தில் நிலைத்திருந்தால் வெற்றியைப் பெற்றிக்க முடியும்.

**ரோகித் சர்மா (மும்பை அணிக் கப்டன்)**

# தேவா இலவசக் கல்வியின் பெருவிளையாட்டு







(வடமராட்சி)

தேவா இலவசக் கல்வி நிறுவனத்தின் நான்காம் ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமராட்சி கிழக்கில் மீள்குடியேறிய மாணவர்களுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டி கடந்த 15ஆம் திகதி செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

வடமராட்சி கிழக்கில் மீள்குடியேறிய மாணவர்களின் இயலளவை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலின் கீழ் கடந்த 10.03-2010ஆம் ஆண்டு தேவா இலவசக் கல்வி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் இணைப்பாளராக ஆசிரியர்களான கு. உதயபாஸ்கரன், சுதாரஞ்சன் ஆகியோர் கடமை புரிந்து வருகின்றனர்.

இத்திட்டத்தின் கீழ் 1000இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இன்று வரை பயனடைந்துள்ளனர். தற்போது இந்நிறுவனம் 4ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு கடந்த 15ஆம் திகதி வடமராட்சி கிழக்கில் மீள்குடியேறிய மாணவர்களுக்கான பெருவிளையாட்டுப் போட்டியை நடாத்தியது. இப்பெருவிளையாட்டுப் போட்டிகளில் வீர,வீராங்கனைகள் பங்குகொண்டு தமது ஆற்றல்களை வெளிப்படுத்தினர். இப்போட்டி நிகழ்விற்கு பிரதம விருந்தினராக அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா மற்றும் மகேஸ்வரி நிதிய உதவித் திட்ட இணைப்பாளர் திருமதி கௌரி, கியூபேட் அன்ரனி, வணபிதா யேசுரட்ணம் அடிகளார், செம்பியன் பற்று அ.த.க. பாடசாலை அதிபர் கே. கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## இளையோர் மெய்வல்லுநர்

(கொழும்பு)

அகில இலங்கை இளையோர் மெய்வல்லுநர் போட்டி இன்று கொழும்பு சுகததாஸ விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது. இதில் 16, 18, 20, 23 வயதுப் பிரிவு வீர,வீராங்கனைகளுக்கிடையில் போட்டிகள் நடைபெறவுள்ளது.

வடமாகாணத்தைச் சேர்ந்த பல பாட-சாலை வீர,வீராங்கனைகள் இப்போட்டியில் பங்குகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

## மாகாண பெருவிளையாட்டு வவுனியாவில் நிரலிடல்

(வவுனியா)

வடமாகாண பாடசாலை அணிகளுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிக்கான நிரல் தயாரித்தல் இன்றும் நாளையும் வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சத்தியபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிரல் தயாரிப்பில் வடமாகாணத்தின் சகல வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்களும் பங்குகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பெருவிளையாட்டுப் போட்டிகள் ஒவ்வொரு மாவட்டங்களில் நடைபெறும் வகையில் ஏற்பாடு செய்யப்படும் எனவும், தடகளப் போட்டிகள் மூன்று நாட்கள் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (93)

## குருநகர் கார்மேல் போய்ஸ் இறுதிக்கு முன்னேற்றம்

(நல்லூர்)

நல்லூர் பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட வடமாகாண ரீதியிலான மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிக்கு குருநகர் கார்மேல் போய்ஸ் அணி முன்னேறியுள்ளது.

அணிக்கு ஆறு பேர் கொண்ட இச்சுற்றுப் போட்டி ஐந்து ஓவர்களைக் கொண்டதாகும்.

இப்போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டமொன்று கடந்த வாரம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இதில் குருநகர் கார்மேல்போய்ஸ் அணியை எதிர்த்து அரியாலை சரஸ்வதி அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய குருநகர் கார்மேல்போய்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட ஐந்து ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 48 ஓட்டங்களைப் பெற்றது. இதில் றொக்ஷன் 18 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 49 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அரியாலை சரஸ்வதி அணி நிர்ணயிக்கப்பட்ட ஐந்து ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 41 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. (48)

## மாவட்ட மட்ட கால்பந்து இன்று இறுதிப் போட்டி

(பருத்தித்துறை)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்துப் போட்டித் தொடரின் இறுதி மற்றும் மூன்றாமிடத்திற்கான ஆட்டம் இன்று இமையாணன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியும் மோதின. இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அணியும், நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் மோதின. இதில் வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. (93)

## INDIAN PREMIER LEAGUE 2014

## இன்றைய ஆட்டம்

சென்னை எதிர் கொல்கத்தா

இடம்: ராஞ்சி. நேரம்: இரவு 8 மணி

# தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரின் வரவேற்கத்தக்க குத்துக்கரணம்

வடமாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இணைத்தலைமையாகப் பங்கு பற்றும் முதலாவது யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கடந்த 21-04-2014 யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண முதலமைச்சர் ஆகியோரின் இணைத் தலைமையில் இது நடைபெற்றது.

முதல்வர் லேட்டா வந்தாலும் லேட்டஸ்ஸா வந்தார் என்பதுபோல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சிவஞானம் சிறிதரன், மதியாபரணம் சுமந்திரன், வடமாகாண கல்வி அமைச்சர் தம்பிராசா குருகுலராஜா, விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், மீன்பிடி உள்ளூராட்சி அமைச்சர் பா.டெனீஸ்வரன்... என்று ஏகப்பட்ட படைபலங்களுடன்தான் கலந்துகொண்டுள்ளார்.

வடமாகாண சபையின் முதலமைச்சராக சி.வி. விக்னேஸ்வரன் கடந்த ஒக்ரோபர் 7ஆம் திகதி அலரிமாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். அதைத் தொடர்ந்து வந்த ஒரு சில வாரங்களின் பின்னர் ஜனாதிபதியினால் யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவராக நியமிக்கப்பட்டார். ஆனாலும் அதில் பங்கெடுக்கமாட்டோம் என்று சுமார் ஆறுமாத கால அஞ்ஞாதவாதம் செய்தார் முதல்வர்.

அந்த வரட்டு கௌரவமும் பிடிவாதமும் இப்போது முடிவுக்கு வந்துள்ளன. மாவட்ட அபிவிருத்தி என்பது எங்களுக்கு சம்பந்தம் இல்லாதது, நாங்கள் உரிமைக்காக குரல் கொடுப்போம், போராடுவோம், அபிவிருத்தி பற்றிப் பேசுவது அரச சார்பு கட்சிகளின் வேலை நாங்கள் அந்த தீட்டினை தீண்டமாட்டோம், அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் மகிந்த சிந்தனையே அரங்கேற்றப்படுகின்றது... என்றெல்லாம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் எடுத்துவிட்ட ஏவுகணைகள் இப்போது அம்போ என்று விடப்பட்டுவிட்டன.



யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் கூட்டத்துக்கான முதல்வரின் புது வரவுக்கு அவர் வழங்கிய வியாக்கியானங்கள் புல்லரிக்கத்தக்கன. அரசாங்கம் மெதுமெதுவாக செய்துவரும் ஆதிக்க செயற்பாடுகளை தடுக்கும் கடமை தங்களுக்கு உண்டாம். வாக்களித்த மக்களின் விருப்பங்களை தாங்கள் உதாசீனம் செய்ய முடியாதாம். என்றெல்லாம் முதல்வர் இப்போதுதான் ஞானம் பிறந்தது போல விளாசித்தள்ளினார். இதையெல்லாம் மற்றவர்கள் செய்யும்போதும் சொல்லும் போதும் "இவர்கள் எல்லாம் துரோகிகள்" என்று தூற்றியவர்கள் இந்தக் கூட்டமைப்பினர்தான்.

நாங்கள் அமெரிக்கா போகிறோம் ஐரோப்பா போகிறோம், தங்கத்தட்டில் வைத்து தமிழீழத்தை கொண்டுவருவோம் என்று ஆடிய ஆட்டமென்ன? கடைசியாக ஆபிரிக்காவையும் விட்டு வைக்கவில்லை. எல்லாம் முடிந்து இப்போது மெல்ல வந்து எதுவுமே நடவாதது போல டக்ளசுடன் வந்து குந்தியிருக்கிறார்கள். ஆக முதல்வரது பேச்சு அபிவிருத்தி பற்றிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரின் கடந்த கால வியாக்கியானங்கள் பிழைத்துப் போயிருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டியுள்ளது. அதனை அவர்கள் ஒப்புக் கொண்டதற்கு சமனாகவே கூட்டமைப்பினரின் இந்த திடீர் மாற்றம் நிகழ்ந்துள்ளது..

அதேவேளை கூட்டமைப்பில் ஏற்பட்டிருக்கும் இந்த மாற்றம் மக்களின் அன்றாட பிரச்சினைகளில் இருந்து நீண்ட காலத்துக்கு கூட்டமைப்பினர் ஒதுங்கியிருக்க முடியாது என்பதை அவர்களுக்கு காலம் உணர்த்தியிருக்கின்றது என்பதன் அடையாளம் எனவும் கொள்ளலாமா?. இந்த குத்துகரணத்துக்குயார் காரணமோ தெரியவில்லை. எப்படியிருந்த போதிலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரின் வரலாற்றில் இது வரவேற்கத்தக்கதொரு மாற்றம்தான்.

மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு கூட்டம் என்பது மக்கள் எதிர்கொள்ளும் அன்றாட பிரச்சினைகளையிட்டும் மாவட்டம் தோறும் இடம்பெறும் அபிவிருத்தி செயற்பாடுகளையிட்டும் மாதாந்தம் கண்காணிக்கின்ற, பிரச்சினைகளுக்கு தீர்வு காணுகின்ற, செயற்பாடுகளை ஒருங்கிணைக்கின்ற ஒரு நிகழ்வு ஆகும். இதில் அரசியல்வாதிகள், அதிகாரிகள் பொதுமக்களின் பிரதிநிதிகள் போன்றோர் கலந்து கொள்வதோடு இராணுவ பொலிஸ் அதிகாரிகளும் சமூகமளிப்பர்.

அங்கே நீதி கோரல் இடம்பெறும், நியாயங்கள் வழங்கப்படும், வேலைத்திட்டங்கள் முடுக்கிவிடப்படும், கேள்விகள் கேட்கப்படும், பதிலிறுக்கப்படும், தீர்வுகள் தேடப்படும், மக்களுக்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் பல சவால்களை எதிர்கொள்ள நேரிடும்...

இவையெல்லாம்

**- எழுகதிரோன் கட்டுரையிலிருந்து.**

# வரலாற்றுப் பார்வையில் $E = mc^2$

**– வினவு –**

**5**


E=mc2 என்ற சமன்பாட்டில் அடுத்து பார்க்க வேண்டியது கணிதக்கூறான நிறையை வேகத்தின் வர்க்கத்தால் (c Squared) பெருக்குவதை பற்றி. பிரெஞ்சு புரட்சி ஆரம்பிப்பதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னர், அறிவியலாளர்கள் பொருட்களின் இயக்கத்தை அளவிடவும் வரையறுத்துக் கூறவும் முயன்று வந்தனர்.

18ஆம் நூ[illegible]ர்டில் நிலப்பிரபுத்துவ பிரான்சில் உயர்குலத்[illegible]ரந்த எமிலி டு சாட்லே என்ற பெ[illegible]த 150 ஆ[illegible]டுகளில் கூட பெரும்பா[illegible]பெண்களுக்கு [illegible]ழங்கப்படாத சுதந்திரமு[illegible] வாய்ப்புகளும் [illegible]க்கப்பெற்றார். சிறுவயது முதலே அறிவு[illegible]ல் நா[illegible]ம் கொண்டிருந்த எமிலி, அறிவியல, உ[illegible]ணிதம், தத்துவத்துறைகளில் சிறப்பான பயிற்[illegible]ய பெற்றார்.

பிரெஞ்சு இராணுவ அதிகாரி ஒரு[illegible]ர மணந்த எமிலியைச் சுற்றி அப்போதைய அறிவுஜீவிகள் கூட்டம் நண்பர்களாகவும் வழிகாட்டிகளாகவும் இருந்தனர். பிரெஞ்சு புரட்சியின் வித்தகர்களில் ஒருவரும் கவிஞருமான வோல்டேருடன் எமிலிக்கு நெருங்கிய நட்பு இருந்தது. முடியரசையும், திருச்சபையையும் கடுமையாக விமர்சித்ததால் வோல்டேர் இரு முறை சிறைத் தண்டனைக்குள்ளாகிறார். ஒரு முறை இங்கிலாந்துக்கு நாடு கடத்தப்படுகிறார். நாடு திரும்பும் வோல்டேருக்கு எமிலியும் அவரது கணவரும் அடைக்கலம் தருகின்றனர். அன்றைக்கு அறிவியலாளர்களும் அரசியல் புரட்சி ஆர்வமும் பிரிக்க முடியாதபடி இருந்ததை இது காட்டுகிறது.

நியூட்டனின் இயக்கம் பற்றிய பிரபலமான கட்டுரையான பிரின்சிபா (Principia) வை எமிலி பிரஞ்சு மொழியாக்கம் செய்கிறார். இன்று வரை பிரான்சின் கல்வி நிலையங்களில் எமிலியின் மொழி பெயர்ப்பே பாடப்புத்தகமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

நியூட்டனின் கோட்பாட்டின்படி, ஒரு பொருளின் இயக்க ஆற்றல், அப்பொருளினது நிறையின் மடங்கு திசைவேக அளவு (E=mv) இருக்கும். ஆனால், ஜெர்மனியை சேர்ந்த கோட்ஃபிரைட் லெப்னிஸ் (Gott-



எமிலி டு சாட்லே

fried Leibniz) ஒரு பொருளின் இயக்க ஆற்றல், அப்பொருளின் நிறையின் திசைவேகத்தின் இருபடி மடங்காக (E = mv2) இருக்கும் என்று முன்மொழிந்தார். அதை பெரும்பாலான அறிவியலாளர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

கோட்ஃபிரைடின் கோட்பாட்டின் மீது ஈர்ப்படைந்த எமிலி, நியூட்டனின் விதியை சந்தேகிக்க ஆரம்பித்தது, அவருடைய வழிகாட்டிகளான மேதைகளை அதிர்ச்சிக்குள்ளாக்குகிறது. உண்மை என்பது நடைமுறையில் சோதித்தறியப்பட்டு நிரூபிக்கப்பட வேண்டிய ஒன்று எனும் அறிவியல் அணுகுமுறையின்படி எமிலி கோட்ஃபிரைடின் கோட்பாட்டை பரிசோதனை மூலம் உறுதி செய்கிறார். 1740ஆம் ஆண்டு மிகப் பிரபலமானதும் சர்ச்சையைக் கிளப்பியதுமான இயற்பியலின் நிறுவன விதிகள் (Institutions of Physics) என்ற கட்டுரையை வெளியிடுகிறார்.

எமிலி அவருடைய 43ஆவது வயதில் கருவுற்று குழந்தையைப் பெற்றெடுத்த பின் நோய்த்தொற்றினால் உயிரிழந்தார். தன் காலத்தின் தளைகளை உடைத்துக் கொண்டு அறிவியல் தேடலில் ஈடுபட்டு அறிவியலுக்கு அழியா பங்காற்றிய முன்னோடிகளில் ஒருவராக எமிலி தூ சாட்டலே விளங்குகிறார்.

இப்போது, ஐன்ஸ்டீன் எப்படி ஆற்றலையும் நிறையையும் இணைத்து 20ஆம் நூற்றாண்டின் நவீன அறிவியலுக்கு அடித்தளம் இடுகிறார் என்று பார்க்கலாம்.

1903ஆம் ஆண்டு தன்னுடன் பயின்ற மிலெவா மாரிக்கை மணந்து கொண்ட ஐன்ஸ்டீன் பல்கலைக் கழகங்களில் வேலை தேடுவதற்கு தேவையான பரிந்துரைகளை அவரது பேராசிரியர்கள் யாரும் தரத் தயாராக இல்லாத நிலையில் சுவிட்சர்லாந்தில் வடிவுரிமை அலுவலகத்தில் ஒரு கீழ்நிலை எழுத்தராக வேலை செய்து பொருள் ஈட்டுகிறார். மரபுகளை உடைத்துக் கொண்டு ஒரு துறையின் இயற்பியல் விதியை இன்னொரு துறைக்கு பொருத்தி இயற்கையின் அடிப்படை இயக்க விதிகளை, அதாவது இப்பிரபஞ்சத்தை படைத்த கடவுளின் சிந்தனையை அறியும் தேடலில் இருக்கும் ஐன்ஸ்டீனுக்கு பதவி உயர்வு, கூடுதல் ஊதியம், குடும்ப வாழ்க்கை, துணைவியின் குறிக்கோள்கள் அனைத்துமே அற்ப விசயங்களாகப்படுகின்றன. எழுத்தர் வேலையில் கவனத்தை செலுத்தாததால் பதவி உயர்வு மறுக்கப்படுகிறார். குடும்பச் சுமை தன்னுடைய சுயத்தையும் மேல் கல்வி கற்கும் வாய்ப்பையும் முடக்கிப் போடுவதை உணரும் மிலெவா, ஐன்ஸ்டீனுக்கு ஊதிய உயர்வு கிடைக்காமல் போனதைக் கேட்டு ஆத்திரப்படுகிறார். அவர்களுடைய திருமண வாழ்க்கை முரண்பட ஆரம்பிக்கிறது.

(தொடரும்)

அதிகாரிகளும் அரசியல்வாதி களும் பல சவால்களை எதிர்கொள்ள நேரிடும்...

இவையெல்லாம் தமிழ்த் தேசிய கூட்டமைப் பினரின் வரலாற்றுக்கு சம்பந்தமில்லாதவை. அவர்களுக்கு அறிக்கைகள் மட்டுமே விடத்தெரியும். மற்றையவர்களுக்கு சவால்மட்டுமே விட்டு பழகிய கூட்டமைப்பினர் ஒருபோதும் மக்களின் பிரச்சினைகளை அவைவிடுக்கும் சவால்களை எதிர்கொண்டு வாழ்ந்து பழக்கப்பட்டவர்களில்லை.

ஆனால் இந்தக் கூட்டத்தில் பங்கெடுக்கும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியினர் இதனிமித்தம் சுமார் இருபதுவருடகால அனுபவம் கொண்டவர் கள். ஆயிரம் துரோகீ குற்றச்சாட்டுகளுக்கு முகம்கொடுக்க நேர்ந்த போதிலும் சாமானிய மக்களின் வாழ்வாதாரங்களையிட்டு வழிகாட்டி களாக இருந்தவர்கள் அவர்கள். ஆனால் முதல்வரும் அவரது கூட்டமைப் பினரும் ஆழம் தெரியாமல் காலை விட்டிருக்கின்றார்கள்.

நாட்டில் வழக்கொழிந்து வரும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் பற்றிய இன்றைய நடை முறைகள் தெரியாது பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலையை படையினரிடமிருந்து மீட்கவேண்டும் என்று தடாலடியாக வாயை கொடுத்த சுரேஷ் பிரேமசந்திரன் டக்ளசிடம் வாங்கி கட்டிக்கொண்டு வாலை சுருட்டவேண்டியிருந்தது.

நாட்டில் என்ன நடக்கின்றது. மழை பெய் கின்றதா? வெயில் எறிக்கின்றதா? என்று கூட தெரி யாது வெளிநாட்டு பயணங்களில் காலம் கடத்து வதும், அவ்வப்போது வந்து 50 ஆண்டுகால கோசங்களான அதே "குடியேற்றம்" "இராணுவ மயமாக்கம்" "நிலப்பறிப்பு" "கலாசார அழிப்பு" என்று தீப்பொறி லெவலில் அறிக்கைகளை மட்டும் விட்டு வாழும் கூட்டமைப்பினருக்கு இனி ஒவ்வொரு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு கூட்டங்களும் ஐயோ கேடு.

கால் நடைகள் திருட்டுத்தன மாக வெளி மாவட்டங்களுக்கு கடத்தப்படுவது, யாழ்ப்பாணத் தில் இடம்பெறும் சுகாதார பரிசோதகர்களின் பணிப்புறக்கணிப்பு, செம்மணி பகுதியிலுள்ள அணை, மற்றும் அதையண்டிய வயல்கள் உப்பாகுதல், செல்வச்சந்நிதி வருடாந்த உற்சவ காலத்தில் மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை தீர்த்தல், இயற்கை அனர்த்தங்களினால் விவசாயிகள் எதிர் கொள்ளும் சிரமங்களுக்குரிய நிவாரணங்கள்,..... என்று தாங்கள் பங்குபற்றிய முதலாவது யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமே படாத் பாடு பட்டபோது இந்த முதல் கூட்டத்தோடேயே கூட்டமைப்புக்காரருக்கு இந்த அரசியல் வெறுத்திருக்கும் என்பது மட்டும் நிச்சயம். போதாக்குறைக்கு சிவனே என்று கொழும்பில் பஜனை பாடிக்கொண்டிருந்த

## வலிப்பு நோயைத் தடுக்கும் வாழைப்பழம்...!

தினமும் வாழைப்பழம் சாப்பிட்டால் இளமையும் அழகும் அதிகரிக்கும். அது மட்டுமல்ல, வலிப்பு நோயிலிருந்து விடுபடலாம் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இங்கிலாந்து மற்றும் இத்தாலியைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் வலிப்பு நோய்க்கான காரணங்களும் தீர்வுகளும் என்ற தலைப்பில் ஆராய்ச்சி மேற்கொண்டனர். இதில் பொட்டாசியம் இரத்தத்தை ஆரோக்கியமாக்கும் என்பதுடன் ரத்தம் உறைதலை தடுக்கிறது என்றும் தெரிவித்துள்ளனர்.

இதனால் அன்றாடம் காலை, மதியம், இரவு என மூன்று வேளையும் 3 வாழைப்பழம் சாப்பிட்டு வந்தால் வலிப்பு நோயைத் தடுக்கலாம் என்று ஆராய்ச்சிகளின் முடிவு தெரிவிக்கிறது.

ஏனெனில் இரத்தம் உறைவதால் வலிப்பு நோய் ஏற்படும் சாத்தியங்கள் அதிகம். வாழைப்பழத்தில் உள்ள பொட்டாசியம் சத்து இரத்தம் உறைவதை தடுக்கும். இது சீரான இரத்த ஓட்டத்துக்கு உதவி மூளைக்கு செல்லும் இரத்தம் பாதிப்படைவதை தடுக்கும். மூளை மற்றும் இரத்த ஓட்டம் ஆரோக்கியமாக இருந்தால் நோய் தாக்குதல் இருக்காது. வலிப்பு நோய் தாக்குதலில் இருந்து, வாழைப்பழம் உள்ளிட்ட பொட்டாசியம் அதிகம் உள்ள உணவுப் பொருட்கள் 21 சதவிகிதம் கூடுதல் பாதுகாப்பு அளிக்கிறது என்று ஆய்வு முடிவில் தெரிவித்துள்ளனர்.

பொதுவாக இரத்தத்தில் உள்ள குறைபாட்டை நீக்குவதில் பொட்டாசியத்துக்கு அதிகப் பங்கு உள்ளது. இந்தச் சத்து அதிகம் உள்ள கீரை வகைகள், பால், முந்திரி, பாதாம் உள்ளிட்ட பருப்பு வகைகள், மீன், மொச்சைப் பயிறு போன்ற தானிய வகைகளை அதிகம் எடுத்துக் கொள்ளலாம் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.




# ஒஸ்கார் 2014 படங்கள் ஒரு கண்ணோட்டம்

- அரவிந்த் சச்சிதானந்தம்.



### Gravity

அதிக விருதுகளை வென்றுள்ள படம், கிராவிட்டி. சிறந்த இயக்குனர், சிறந்த ஒளிப்பதிவு, சிறந்த படத் தொகுப்பு, சிறந்த இசை உட்பட மொத்தம் ஏழு விருதுகளை இந்தப் படம் வென்றுள்ளது. விண்வெளியில் சிக்கிக்கொண்டு தவிக்கும் பெண்ணைப் பற்றிய சயன்ஸ் ஃபிக்ஷன் படம் இது. கதாநாயகி சாண்ரா புல்லக் மிகவும் சிறப்பாக நடித்திருந்தும் அவருக்கு விருது



கிடைக்கவில்லை.

எனினும் அனைவரும் எதிர் பார்த்ததைப் போல், இயக்குனர் அல்ஃபோன்சா கௌரான் சிறந்த இயக்குனருக்கான விருதைப் பெற்றுள்ளார். ஒஸ்கார் பெறும் முதல் மெக்சிகன் இவர். விண் வெளியை மிகவும் தத்ரூபமாகத் திரையில் காண்பித்ததற்காக நாசா விஞ்ஞானிகள் உட்பட பலரும் இவரைப் பாராட்டி வருகின்றனர்.

### Dallas Buyers Club


குறைந்த பொருட்செலவில் வெறும் 25 நாட்களில் எடுக்கப் பட்ட இந்தப் படம் சிறந்த நடிகர், சிறந்த துணை நடிகர் உள்பட மூன்று விருது களைப் பெற்றுள்ளது. எண்பதுகளில் அமெரிக்கா வில் வாழ்ந்த ரோன் வூட்ரூஃப் என்ற எய்ட்ஸ் நோயாளி யைப் பற்றிய படம் இது. முப்பது நாட்களில் இறந்து விடுவார் என்று அவரது டாக்டர்கள் கெடு விதிக்கின்றனர்.



ஆனால், அவரோ நாடு விட்டு நாடு சென்று தடைசெய்யப்பட்ட பல மருந்துகளை வாங்கி உட்கொண்டு கிட்டத்தட்ட ஏழு ஆண்டுகள் உயிர் வாழ்ந்திருக்கிறார். மேலும் அந்த மருந்துகளை அமெரிக்காவுக்குக் கடத்தி வந்து, பல எய்ட்ஸ் நோயாளிகளுக்கு விநியோ-கம் செய்திருக்கிறார். இந்த உண்மைக் கதையில், ரோன் கதாபாத்திரத்தில் நடித்த் மாத்யூ மெக்கனாகே சிறந்த நடிகருக்கான விருதைப் பெற்றுள்ளார். அவரது நோயாளி நண்பராக, திருநங்கை கதாபாத்திரத்தில் நடித்த ஜாராத் லீட்டோ சிறந்த துணை நடிகருக்கான விருதைப் பெற்றுள்ளார். எய்ட்ஸ் நோயாளி போல் தோற்றமளிக்க வேண்டும் என்பதற்காக மாத்யூ 21 கிலோ வரை தன் உடல் எடையை குறைத்திருக்கிறார். லீட்டோ தன் பங்குக்கு 18 கிலோ எடையை இழந்திருக்கிறார்.

### 12 Years a Slave

இதுவும் நிஜ வாழ்வையொட்டி எடுக்கப்பட்ட படம். 19ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவைச் சேர்ந்த சொலமன் நார்தப் என்ற கறுப்பினத்தவரைக் கடத்தி வில்லியம் ஃபோர்ட் என்பவரிடம் அடிமையாக விற்றுவிடுகின்றனர். அவர் மேற்கொண்டு பலரிடம் அடிமையாக விற்கப்பட்டு, பல இன்னல்களைச் சந்தித்து, 12 ஆண்டுகளுக்குப் பிறகு சுதந்திரக் காற்றை சுவாசிக்கிறார். பிரபல



ஹொலிவுட் நடிகர் பிராட் ஃபிட் தயாரித்த இந்தப் படம், சிறந்த திரைப்படம், சிறந்த துணை நடிகை, சிறந்த தழுவல் திரைக்கதை ஆகிய மூன்று விருதுகளைப் பெற்றுள்ளது. அமெரிக்கச் சரித்திரத்தில் கரும்புள்ளியாக இருக்கும் அடிமை வர்த்தகத்தைப் பற்றியும், பழைய அமெரிக்காவின் இருள் செறிந்த பக்கத்தையும் பேசும் இந்தப் படத்துக்கு அமெரிக்கர்களிடையே பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது. வசூலிலும் படம் பெரும் சாதனை படைத்து வருகிறது. அடிமைப் பெண் கதாபாத்திரத்தில் சிறப்பாக நடித்த லுபித்தா நியோங்கோவுக்குச் சிறந்த துணை நடிகைக்கான விருது கிடைத்துள்ளது. ஒஸ்கார் விருது பெறும் முதல் ஆபிரிக்க நடிகை இவர்.

### Blue Jasmin

அமெரிக்க புது அலை சினிமாவின் பிதாமகன்களில் ஒருவரான வூடி ஆலன் எழுதி இயக்கியப் படம், ப்ளூ ஜாஸ்மின். அமெரிக்க உயர்குடி வர்க்கத்தைச் சேர்ந்தவள் ஜாஸ்மின். பணத் திமிரால் யாரை யும் மதிக்காமல், ஆடம்பரமாக வாழும் அவள், ஒரு கட்டத்தில் சொத்துகளை இழந்து, கணவனை இழந்து தன் தங்கையிடம் அடைக்கலம் புகுகிறாள். புது வாழ்க்கையைத் தொடங்க



முயற்சிக்கும் போதெல்லாம், பழைய நினைவுகள் அவளை வாட்டி வதைக்கின்றன. ஜாஸ்மின் கதாபாத்திரத்தில் நடித்த கேட் பிள்ளான்செட் சிறந்த நடிகைக்கான விருதைப் பெற்றுள்ளார். வூடி ஆலனுக்கு சிறந்த திரைக்கதை ஆசிரியருக்கான விருது கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அந்த விருதை ஹெர் படத்தின் திரைக்கதை ஆசிரியர் ஸ்பைக் ஜோன்ஸ் தட்டிச் சென்றுவிட்டார்.

### Her

தனிமையில் வாழும் கதாநாய கன், artificial intelligence தொழில்நுட்பம் கொண்ட ஒப்பேரட்டிங் சிஸ்டம் ஒன்றை வாங்கி அதற்கு சமந்தா என்று பெயர் சூட்டுகிறான். ஒரு கட்டத்தில் சமந்தாவுடன் அவனுக்குக் காதல் ஏற்பட்டுவிடுகிறது. கிளாடியேட்டர் புகழ் ஜாக்குவின் ஃபீனிக்ஸ் தான் இந்தப் படத்தின் கதாநாயகன்.

### The Great Beauty

சிறந்த வெளிநாட்டுத் திரைப்படத்துக்கான விருது இத்தாலியப் படமான கிரேட் ப்யூட்டிக்குக் கிடைத்துள்ளது. ஒரு எழுத்தாளரையும் அவருடைய தேடலையும் பற்றியது இந்தப் படம். இயக்கியவர் பாவ்லோ சொர்ரெண்டினோ. வாழ்வின் வெறுமையைக் கடக்க முயலும் கதாநாயகன், தன் வாழ்க்கைப் பயணத்தின் மூலமும், தான் அன்றாடம் சந்திக்கும் மனிதர் களின் மூலமும் வாழ்க்கையின் அர்த்தத்தை புரிந்து கொள்வதே படத்தின் கதை.

### Frozen

சிறந்த அனிமேஷன் திரைப்படத்துக்கான விருதைப் பெற்ற படம். வோல்ட் டிஸ்னி




தயாரிப்பு. இதுவரை ஏராளமான அனிமேஷன் படங்களைத் தயாரித்திருந்தாலும் வோல்ட் டிஸ்னி விருது பெறுவது இதுவே முதல்முறை. இந்தப் படத்தில் இடம்பெற்ற "லெட் இட் கோ" என்ற பாடலுக்குச் சிறந்த பாடலுக்கான விருது கிடைத்துள்ளது.

மற்றபடி, பத்து பிரிவுகளில் பரிந்துரைக்கப்பட்ட அமெரிக்கன் ஹசல் திரைப்படமும், ஐந்து பிரிவுகளில் பரிந்துரைக்கபட்ட வுல்ஃப் ஒப் வோல் ஸ்ட்ரீட் திரைப்படமும் ஒரு விருதைக்கூட வெல்லவில்லை.



# பல இழப்புக்களின் மத்தியிலும் வெற்றி வெளியீடுகளுடன் மிளிரும் வடமராட்சி புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை

## வரலாறு

வளம் கொழிக்கும் ஈழத் திருநாட்டின் தலையென விளங்குவது யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் திலகம் போன்று விளங்குவது வடமராட்சிப் பிரதேசம். வடமராட்சியில் புலவர்கள் வாழ்ந்த பெருமையுடையது புலோலி எனும் கிராமம். இக்கிராமத்தின் தென்பகுதியில் புகழுடன் அமைந்து விளங்குவது யா/புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையாகும். இப்பாடசாலை 1833ஆம் ஆண்டு மெதடிஸ்த மிஷனரியினரால் ஆரம்பிக்கப்பட்டது. கிறிஸ்தவ மிஷனரியினால் ஆரம்பிக்கப்பட்டாலும் இந்து மதத்தவர்களும் அதிகமாகக் கல்வி பயில்கின்றனர். ஆரம்ப காலத்தில் 1 – 8 வரை வகுப்புக்கள் காணப்பட்ட போதிலும் காலப்போக்கில் 1 – 11 வரையான வகுப்புக்கள் விரிவுபடுத்தப்பட்டன. ஒரே ஒரு கட்டடத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இன்று மாடிக்கட்டடங்கள் மூன்றினை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. 'கற்றாய்ந்தொழுகு' என்ற மகுட வாசகத்துடன் பொருந்திய இலச்சினை ஒன்றும் இப்பாடசாலைக்கு உண்டு. நெற்கதிர், எரியும் விளக்கு, புத்தகம் என்பன இலச்சினையில் பொறிக்கப்பட்ட சின்னங்களாகும். இப்பாடசாலைக்குப் பொருள் பொதிந்த கீதம் ஒன்று உள்ளது.

1987ஆம் 1996ஆம் ஆண்டுகளில் இலங்கை இராணுவத்தினரும் 1989ஆம் ஆண்டு இந்திய அமைதி காக்கும் படையினரும் இப்பாடசாலையில் நிலைகொண்டிருந்தனர். இதன் காரணமாகக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்தன. பாடசாலை வளங்களும் பாதிப்படைந்தன. 1987ஆம் ஆண்டு தொடக்கம் ஐந்து தடவைகள் குண்டு வீச்சுக்கு இலக்காகி கட்டடங்கள் சிதைவடைந்தன. பல போர் அனர்த்தங்களுக்குள்ளாகி சிதைவடைந்த இப்பாடசாலையில் மாணவர்கள் கற்க முடியாது பல இடங்களுக்கு அலைந்து திரிந்த காலங்கள் இப்பாடசாலை வரலாற்றில் மிகத் துன்பமான காலங்களாகும். 1999ஆம் ஆண்டு இப்பாடசாலையின் கட்டடத் தொகுதியின் ஒரு பகுதியில் வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களம் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இது பாடசாலையின் அமைவிடத்தையும் பாடசாலையின் பெயரையும் வடமராட்சி தென்மராட்சி ஆசிரியர்களும் பொதுமக்களும் அறிவதற்குப் பெரும் வாய்ப்பாக அமைந்ததுடன் திணைக்களத்தின் நேரடிக் கண்காணிப்பும் பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுவதாக அமைந்துள்ளது. கற்றறிந்த பல கல்விமான்களை உருவாக்கி நாட்டுக்கு அளித்த பழம் பெருமை வாய்ந்த இப்பாடசாலையின் வரலாறானது பல திருப்பங்களை அடைந்து இன்றைய நிலைக்கு முன்னேறியுள்ளது.

## அதிபரின் செய்தி.........

*சிறிய பாடசாலையாக ஆரம்பித்த எமது யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலை இன்று தரம்-II பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டு கல்வி அபிவிருத்தியிலும் ஏனைய இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் மேம்பட்டு நிற்கின்றது.. வரலாற்றுப் பெருமை கொண்ட இப் பாடசாலைக்கு அதிபர் பொறுப்பை ஏற்றுக்கொள்ள எனக்கும் சந்தர்ப்பம் கிடைத்தமையை இட்டு நான் மிகவும் பெருமையடைகின்றேன்.*

*இன்றைய நவீன உலகின் போக்கோடு எமது சிறார்களையும் இணைத்து எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றல் கொண்டவர்களாக அவர்களை மாற்றியமைப்பதை நோக்காகக் கொண்டே எமது முகாமைத்துவச் செயற்பாடுகள் நகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்தவகையில் 2009 ஆம் ஆண்டிலிருந்து எமது பாடசாலையில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் தரம் 10 இல் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பயனாக இன்று எமது பாடசாலையும் இணையத்தள வாயிலாக உலகுடன் தொடர்பு கொள்ள வாய்ப்புக் கிடைத்தமை எமக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.*






பிரியாவிடை வைபவங்கள்

## புலமைப் பரிசில் சித்தியெய்தியோர்

2010 ச.சங்கமன் 142
2009 – –
2008 செ.சாரங்கன் 114
2007 இ.அஜித் 144
2007 பி.பிரகலாதன் 161
2007 ம.மோகனஷரூபி 154
2006 ச.கஜமுகன் 144
2006 உ.சதுர்சனன் 141
2005 – –
2004 இ.ஜனகன் 128
2004 பி.கிறிஸ்ரைன் இலவன் 124
2003 உ.துளசிகன் 133
2003 ச.அனுரதன் 118






தேசியமட்டசாதனைகள்



மாணவர்களின் ஆற்றுகை நிகழ்வுகள்

# வேலணை ஊரதீவு கிராமத்திற்கு மின் விநியோகம் ஆரம்பித்து வைப்பு



(வேலணை)

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட மடத்துவெளி, ஊரதீவு பகுதிக்கு 25 வருடங்களுக்குப் பின்னர் கடந்த செவ்வாய்க்கிழமை மின்விநியோகம் வழங்கப்பட்டது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா இம் மின்விநி யோகத்தை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், வேலணை பிரதேச சபைத் தவிசாளர் சிவராசா (போல்), வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா தேவி, யாழ்.பிராந்திய மின் பொறியியலாளர் ஞானகணேசன், தீவகப் பகுதிக்கான மின் அத்தியட்சகர் அருள்நாதன், வடக்கின் வசந்தம் திட்டத்தின் பணிப்பாளர் கோசல உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பிரதேச சபைத் தவிசாளர், நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வின் போது ஊர் மக்களாலும் பொது அமைப்புகளாலும் முன்வைக்கப்பட்ட பல கோரிக்கைகளை ஏற்றுக் கொண்ட அமைச்சர் முன்னுரிமை அடிப்படையில் படிப்படியாக இக் கோரிக்கைகள் இவ்வருட இறுதிக்குள் பூர்த்தி செய்யப்படுமெனத் தெரிவித்ததுடன் மின் இணைப்பு வழங்குவதில் ஒத்துழைத்த அனைவருக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

25 வருடங்களுக்குப் பின்னர் இப்பகுதிக்கு மின்வசதி வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து உதவிய அமைச்சருக்கு ஊர் மக்கள் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

## கவிதைத் தொகுப்பு நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

திருமதி சுபாஷினி பிரணவனின் குமுறல் கவிதைத்தொகுப்பு நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் செங்குந்தா இந்துக்கல்லூரி ஆசிரியர் திருமதி வாசுகி சுதாகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாணக்கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் வரவேற்புரையினை முத்துத்தம்பி மகாவித்தியாலய ஆசிரியர் திருமதி இந்துமதி தயாபரன், வெளியீட்டுரையினை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஓய்வு நிலை விரிவுரையாளர் கலாநிதி பண்டிதர் செ.திருநாவுக்கரசு நூல் மதிப்பீட்டுரையினை கு.பாலசண்முகம் ஆகியோர் வழங்கவுள்ளனர். (63)

## ஏழாலை பொது நூலகத்தின் புத்தகதின நிகழ்வு

வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் ஏழாலை உப அலுவலக பொதுநூலகத்தின் உலக புத்தக தின நிகழ்வுகள் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஏழாலை வடகிழக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் ஏழாலை உப அலுவலக பொறுப்பதிகாரி திருமதி எஸ்.சுகன்யா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலி. தெற்கு பிரதேசசபைத் தவிசாளர் தியாகராஜா பிரகாஷ்,சிறப்பு விருந்தினராக லண்டனைச் சேர்ந்த சமூக ஆர்வலர் திருமதி. கௌசலா தயாபரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வின் கலை நிகழ்வுகளாக வரவேற்பு நடனம் குழுப் பாடல் குழு நடனம் பக்திப்பாடல், கவிதை,தனிநடனம் என்பன்வற்றுடன் உலக புத்தக தினப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு என்பன இடம்பெறவுள்ளது. மேலும் பொது நூலகத்தின் சிறுவர் பகுதிக்கு ஒரு தொகுதி பொருட்களினை சமூக ஆர்வலர் திருமதி கௌசலா தயாபரன் அன்பளிப்பாக வழங்கவுள்ளார். (63)

## வெள்ளி நற்சிந்தனை...



## உணர்ச்சி மிகுதியே ஒருவனுக்கு விரோதி

உணர்ச்சிகளே மனிதனுக்குப் பரமவிரோதி ஆகும் போது அவன் மதிப்பீடு செய்வதில் தவறிப் போகிறான். அந்தஸ்தை இழந்து விடுகிறான். எதுசரி, எதுதவறு என்று தெரியாமல் தடுமாறிப் போகிறான். ஒழுக்கம் கெட்டு விட்டால், எல்லாமே கெட்டுப்போய் விடுகிறது.

உயர் குடியில் பிறந்த அனைவரும் உயர்வான நடத்தை உடையவர்களாக இருப்பார்கள் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஒருவன் நெடுநாள் கஷ்டப்பட்டு அடையும் சமூக மரியாதை, அவனுடைய ஒரு சிறிய தவறினால் பாழ்பட்டுப் போய்விடக் கூடும். வேடிக்கை என்னவென்றால், படிக்காதவர்களை விடப் படித்தவர்களிடம் தான் போலித்தனம் மிகுதியாக இருக்கிறது.

இராவணன் வேதங்களைக் கரை கண்டவன், பிரம்மாவின் நேரடி வாரிசு, வீரம் மிக்கவன் அனைத்துக்கும் மேலாக அவன் ஒரு சிறந்த சிவபக்தன், இத்தனை இருந்தும் அவனுடைய வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்தது எது? - காமம்,

அவனுடைய இந்தக் குறையை ஆஞ்சநேயர், கும்பகர்ணன், மண்டோதரி இப்படிப் பலரும் எடுத்துக் காட்டியும் அவன் பொருட்படுத்தவில்லை.

தசரதனிடம் ஒரு குறை இருந்தது. இராமனிடம் அவருக்கு அளவு மீறிய பிரியம். மகனிடம் அன்பு இருக்க வேண்டியதுதான். அதற்காக அந்த அன்புக்கு அடிமை ஆகிவிடக் கூடாது. மகனை என்றோ ஒரு நாள் பிரிய வேண்டும் என்கிற உணர்வில், பிரிவை அவர் சாதாரணமாக எடுத்துக் கொண்டிருக்க வேண்டும். தசரதரால் இராமனின் பிரிவைத் தாங்க முடியவில்லை.

சுகமோ, துக்கமோ, எதுவும் அளவுக்கு மீறி பாதிக்க அனுமதித்துவிடக் கூடாது எந்த உணர்ச்சியும் அளவு கடந்தால் மனிதனுக்குப் பகை ஆகிவிடும்.

ஒருவனின் உயர்ந்த வாழ்வுக்கு வழிகாட்டும் திருவள்ளுவப் பெருமான்,

*பொறிவாயில் ஐந்து*
*அவித்தான் பொய்தீர் ஒழுக்க*
*நெறி நின்றார் நீடுவாழ் வார்.*

என்று கூறுகிறார், ஐம்பொறிகள் வழியாக எழும் ஆசைகள் அனைத்தையும், அழிக்க முதல்வனே ஆண்டவன். அவன் காட்டும் மெய்யான நெறியில், வழுவாமல் வாழ்பவரே, ஐம்பொறிகளையும் அடக்கி அழியாத அமர வாழ்வு அடைவர்.

எனவே உணர்ச்சி மிகுதியால், பொறிகளைக் கட்டுப்படுத்தாவிடின், அதுவே ஒருவனுக்கு விரோதியாகும்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிருக்கப் பெட்டகம்

ஒருநாளும் முகம் காட்டாத அந்தப் பறவையின் குரலை வழக்கம் போல் விடுமுறை நாளன்றும் கேட்ட போது சாவகாச மனநிலை காரணமாக விளையாட்டுச் சிறுவன் போல் நானும் பதிலுக்கு அது போல கூவ... முயன்றேன்.

கூ....... பதிலுக்கு என்னிடமிருந்து ஒரு கூ......

கூ....... கூ.......

இப்படியாக சில நிமிடங்கள் தொடர்ந்த போது நான் கத்துவதற்கு பதிலோசையாகத்தான் அந்தக் குயில் கூவுவது போல் ஒரு பிரமை. பார்ப்பவருக்கும் அப்படித்தான் தோன்றும். நானும் அப்படியே நினைத்துக் கொண்டேன். யார் கண்ணிலும் படாத ஒரு பாடகியின் உ[illegible]த்தினுள் என்னை அது அனுமதித்தைப்போன்ற பெருமை ஏற்பட்டது. குறும்புத்தனமாக திடீரென்று என் கூ..... வை நிறுத்தினேன். என் பதிலோசை [illegible]ராததால் அது திகைத்து தன் கூவலை நிறுத்தும் என [illegible]னோ எதிர்பார்த்தேன்.

ஆனால்.... 'போடா.. போடா.. புண்ணாக் [illegible]ாடாத.. தப்புக் கணக்கு.. என்பது போல் அது பாட்டுக்கு [illegible] பாட்டை அதே இடைவெளியில் தொடர்ந்து கொண்டுதான் இருந்தது. எனக்கு ஏமாற்றமாக இருந்தது. சில கணங்களுக்கு முன் இனிமையாக ஒலித்த ஓசை ஏனோ இப்போது நாராசமான சப்தமாக ஒலித்தது.

எல்லா உயிரினங்களுக்கும் பொதுவான இயற்கையை மனித குலம் இப்படித்தான் தன்னுடைய பயன்பாட்டுக்கு மட்டுமான ஒன்றாக கருதிக் கொண்டு ஏகபோக உரிமையுடன் அதை வளைத்து நாசப்படுத்திக் கொண்டிருக்கிறது. தன்னுடைய விருப்பம் போல் இயற்கை [illegible]யங்க வேண்டும் என பேராசையுடன் எதிர்பார்க்கிறது. '[illegible]கம் பிறந்தது எனக்காக' என்று கவிஞனொருவனுக்கு பாடல் எழுதத் தோன்றியதும் இந்த மனநிலையில்தானா?

**– சுரேஷ் கண்ணன்**

வீட்டை நோக்கி இருளையும் தனிமையையும் அனுபவித்தவாறே நடந்து கொண்டிருந்தபோது, செல்போனில் FM ரேடியோவைத் தட்டினேன். ஏதோ ஒரு நிலையத்திலிருந்து ஒரு பக்திப் பாடல். குறிப்பாக எந்த ஒரு கடவுளையும் விளித்துப் பாடிய பாடலல்ல. ஆனாலும் அது கிறிஸ்தவ மதப் பாடலாக இருக்க வேண்டும்.

மெலிதான தேம்பல்களுக்கு மத்தியில் ஒலித்தது அந்தப் பெண்குரல்...

"குற்றவாளிக் கூண்டில் வாழும் மனித நெஞ்சங்களே...
தீர்ப்பு சொல்லும் அருகதை நமக்குள்ளதா..."

தீர்ப்பு சொல்லும் அருகதை யாருக்குத்தான் உள்ளது? சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் நான் எழுதிய கட்டுரை ஒன்றின் தலைப்பு: "தீர்ப்பு எழுதப்படும்போது நீதி செத்துவிடுகிறது" (பார்க்க : 'குற்றம், தண்டனை, மரண தண்டனை').

எத்தனை நீதி நூற்கள், சட்ட விதிகள், வழிகாட்டு நெறிமுறைகள் இருந்தபோதும் யாரும் யார்க்கும் தீர்ப்பளித்துவிட இயலாது. ஆனால், நீதிபதிகள் மட்டுமின்றி நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கணமும் எத்தனையோ தீர்ப்புகளை அளித்துக் கொண்டுதானே உள்ளோம்.

காந்தியடிகளிடம் ஒரு முறை மரண தண்டனை குறித்து உங்களுடைய கருத்து என்ன எனக் கேட்டார்கள். அவர் சொன்னார் :

"மரண தண்டனை என்ன, தண்டனையே கூடாது என்பது தான் என் கருத்து..."

மெலிதான தேம்பல்களுக்கு மத்தியில் அந்தப் பெண்குரலை இன்னொரு முறை கேட்க நெஞ்சு துடிக்கிறது.

"குற்றவாளிக் கூண்டில் வாழும் மனித நெஞ்சங்களே...
தீர்ப்பு சொல்லும் அருகதை நமக்குள்ளதா..."

**– அ.மார்க்ஸ்**

உங்களை மிருகங்களிடம் ஒப்படைக்காதீர்கள்.

நீங்கள் என்ன நினைக்கவேண்டும், என்ன செய்ய வேண்டும், என்ன உணரவேண்டும் என்று கட்டளையிட்டும் நீங்கள் என்ன உண்ண வேண்டும் என்ன உடுக்க வேண்டும் என்று ஆணையிட்டும் ஒரு மாட்டைப் போல் நடத்தும் செயற்கை மனிதர்களிடம் உங்களை ஒப்படைக்காதீர்கள். இயந்திர மனமும், இயந்திர மூளையும் கொண்ட ஒரு இயந்திர மனிதனிடம் உங்களை ஒப்படைக்காதீர்கள்.

நீங்கள் இயந்திரங்கள் இல்லை.
நீங்கள் மாடுகள் இல்லை.
நீங்கள் மனிதர்கள்! மனிதர்கள்!!

**– தி கிரேட் டிக்டேட்டர் படத்தின் இறுதிக்காட்சியில் சார்ளி சாப்ளின் வசனம்**

# 10 சிரேஷ்ட அமைச்சர்களுக்கு 90 சாரதிகள் நியமனம்



அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் சிரேஷ்ட அமைச்சர்கள் 10 பேருக்காக நியமிக்கப் பட்டுள்ள சிரேஷ்ட அமைச்சர் செயலகத்திற்கு இணைக் கப்பட்டுள்ள 127 ஊழியர்களில் 90 பேர் சாரதிகள் என்று தக வல்கள் தெரிவிக்கின்றன.

நியமிக்கப்பட்டவர்களில் பெரும்பான்மையானவர்கள் சாரதிகள் என்பதனால் செயல கங்களின் ஏனைய செயற்பாட்டு களுக்கு 37 ஊழியர்கள் மட் டுமே உள்ளனர்.

இந்நிலையில், மனிதவள அபிவிருத்திக்கு தேவையான நடவடிக்கையினை ஒரு சிறு பிரிவினரால் மேற்கொள்ள முடியாது எனத் தெரிவித்துள்ள மனித வள சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர அறிவு மற்றும் அனுபவம் மிக்க அதிகாரிகள் அடங்கிய இணைப்பு பிரிவு ஒன்றை அமைக்குமாறு இந்த காரியாலயத்தை பராமரிப்பதற்கு வருடத்துக்கு 10 மில்லியன் ரூபாவை ஒதுக்குமாறும் அவர் கோரியுள்ளார்.

# 2016 முதல் மன்னாரில் எரிவாயு உற்பத்தி

(மன்னார்)

மன்னார் கடற்படுகையில், இருந்து வரும் 2016ஆம் ஆண்டு தொடக்கத்தில் எரிவாயு உற்பத் தியை ஆரம்பிக்க முடியும் என்று எதிர்பார்ப்பதாக கெய்ன் இந்தியா நிறுவனம் தெரிவித் துள்ளது.

கெய்ன் இந்தியா நிறுவனத் துக்கு வழங்கப்பட்ட நான்கு துண்டங்களில், இரண்டில் எரி வாயு படிமங்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

டோராடோ, பரக்குடா என்று பெயரிடப்பட்டுள்ள இந்த இரண்டு துளைகளும் மன்னார் கடற்படு கையில் அமைந்துள்ளன.

இங்கு 74 மில்லியன் பரல் எண்ணெய் படிமங்கள் இருப்பதாக கெய்ன் இந்திய நிறுவனம் மதிப்பிட்டுள்ளது.

இந்த எரிவாயுப் படிமங் களை வணிக ரீதியாக உற்பத்தி செய்வது குறித்து தொடர்ந்து இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுக்கள் நடாத்தப்பட்டு வருவ தாக கெய்ன் இந்திய நிறுவனம் தெரிவித்துள்ளது.

# யாழ்.சுகாதார சேவையை ஸ்தம்பிதமடையச் செய்ய முயற்சி

## அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

**யாழ். சுகாதார சேவையை ஸ்தம்பிதம் அடையச் செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக. அரச மருத்துவ அதி காரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக சங் கம் நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.**

GMOA
Government Medical Officers' Association

அதில் தெரிவித்துள்ளதா வது,

யாழ்.மாவட்டத்தில் யாழ். போதனா வைத்தியசாலை, தெல்லிப்பளை, சாவகச்சேரி, பருத்தித்துறை மற்றும் ஊர்கா வற்துறை ஆதார வைத்தியசா லைகள் உட்பட சுமார் 54 இற்கு மேற்பட்ட வைத்தியசாலைகள் உள்ளன.

கடந்த காலங்களில் வைத் தியர்களின் இடமாற்றமானது முறையாக நடைமுறைப்படுத் தப்படாமையால் மேற்படி வைத்தியசாலைகளில் சுமார் 25இற்கும் மேற்பட்ட வைத்திய சாலைகள் மூடப்பட்டு செயற் பாடின்றி இருந்தன. இயங்கி வந்த வைத்தியசாலைகளில் கூட பெரும் வைத்தியர் பற்றாகுறை நிலவி வந்தது . எனினும் 2013 ஆண்டுக்கு பின் சுகாதார அமைச்சானது சட்டப்படி வழங் கப்பட்ட இடமாற்றங்களை நடை முறைப்படுத்த ஆரம்பித்தது.

இந்த நடவடிக்கைக்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கமும் தனது பூரண ஆத ரவை வழங்கி வ்ந்தது. இதன் காரணமாக வட மாகாணத்தில் மூடப்பட்டு இருந்த வைத்தியசா லைகளில் பெருமளவு மீளத் திறக்கப்பட்டு மக்களுக்கு இலவச சுகாதார சேவைகளை சமனான பரம்பலில வழங்கக்கூடிய வாய்ப்பு ஓரளவு ஏற்பட்டது.

எனினும் யாழ் மாவட்டத்தில் மேலும் சுமார் பத்துக்கு மேற் பட்ட வைத்தியசாலைகள் வைத் தியர் இன்மையால் இன்னும் மூடப்பட்டு இயங்க முடியாத நிலையில் உள்ளன. இதனால் அப்பகுதியில் உள்ள மக்க ளுக்கு இலவச சுகாதார சேவையைக் பெற்றுக் கொள்ள கூடிய உரிமை மறுக்கப்பட்டு வருகின்றது .

துரதிஷ்டவசமாக இந்நிலை ஏற்படுவதற்கான காரணங்களில் ஒன்றாக யாழ். போதனாவைத்தி யசாலை பணிப்பாளர் மற்றும் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை அத்தியட்சகர் ஆகியோர் உரிய பிரதியீடு கிடைத்தும் இடமாற்றம் பெற்ற வைத்தி யர்களை தமது தனிப்பட் ஆர்வம் காரணமாக விடுவிக்காமல் மறுத்து வருவதும் அமைந் துள்ளது.

மேலும் சிலர் இந் நட வடிக்கைக்கு மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ். கிளையை பிழையாக வழி நடத்தி அதன் ஆதரவை பெற்று காலத்தை கடத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இத்தகைய நடவடிக்கைகளால் சுகாதார சேவைகளின் பரம்பலில் பெரும் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நோய்த் தொற்றிலிருந்து பாதுகாக்க

# மத்திய கிழக்கிற்கு செல்வோருக்கு முகமூடிகள் வழங்க நடவடிக்கை

மத்திய கிழக்கு நாடுகளுக் குச் செல்லும் இலங்கையர்கள் சுவாசம் தொடர்பான குரோனா வைரஸ் தொற்றுநோயால் பாதிக்காமல் இருப்பதற்கு முக மூடிகளை வழங்குவதற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் நடவடிக்கை எடுத்துள் ளது.

இவ்வாறு வழங்குவதற்கு 50,000 முகமூடிகளை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் கொள்வனவு செய்திருப்பதாக பணியகம் அறிவித்துள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் சுவாசம் தொடர்பான குரோனா வைரஸ் நோய் பரவி வருகிறது. இந்தத் தொற்றுநோயால் இலங் ்கையர் எவரும் இதுவரை பாதிக்கப்படாத நிலையில், இலங்கையிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் இலங்கையர்களுக்கு பாது காப்பான முகமூடிகளை வழங்க வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் நடவடிக்கை எடுத் துள்ளது.

இது தொடர்பாக வெளி நாட்டு வேலைவாய்ப்புப் பணிய கத்தின் தலைவர் அமல் சேனா லங்காதிகார உரிய அதிகாரிக ளுக்குப் பணிப்புரை விடுத்துள் ளார்.மத்திய கிழக்கு நாடுக ளுக்கு வேலைவாய்ப்புப் பெற்றுச செல்பவர்கள் தொழில்தொடர் பான ஒப்பந்தம் கைச்சாத்திடும் போதே அவர்களுக்கு முகமூடி களை வழங்குவதற்கு பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளது. அத்துடன், குறித்த சுவாச நோய் தொடர்பில் விழிப்புணர்வு ஏற் படுத்தும் நடவடிக்கைகளையும் பணியகம் எடுத்துள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளிலி ருந்து இலங்கை வந்தவர்கள் எவருக்காவது இரண்டு கிழமைக ளுக்குள் சுவாசிப்பதில் சிரமம் அல்லது சளித்தொல்லை, தலைச் சுற்று, வாந்தி போன்ற அறிகுறி கள் தென்பட்டால் உடனடியாக வைத்தியசாலையை நாடுமாறும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவுறுத்தல் விடுத் துள்ளது.

# திருட்டுப் போன மோ.சைக்கிள் சுன்னாகத்தில் கண்டுபிடிப்பு

மல்லாகம் சோடாக் கொம் பனி ஒழுங்கையிலுள்ள வீடொன் றில் கடந்த திங்கட்கிழமை இரவு திருடப்பட்ட மோட்டார் சைக்கிளொன்று மறுநாள் செவ்வாய்க்கிழமை சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் திற்கு அருகிலிருந்து மீட்கப்பட் டதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீட்டின் முற்றத்தில் 2 இலட்சம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிள் கடந்த திங் கட்கிழமை இரவு திருடப்பட்டிருந்தது.

மோட்டார் சைக்கிள் திருடப் பட்டமை தொடர்பில் அதன் உரி மையாளர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

இந்நிலையில் சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் திற்கு அருகில் காலையிலிருந்து மோட்டார் சைக்கிளொன்று அநாதரவாக திறப்புடன் நிற் பதாக பொதுமக்கள் பொலிஸா ருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் பொலிஸார் குறித்த மோட்டார் சைக்கிளினை மீட்டு பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளினை முன்னெ டுத்து வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# வெளிநாடுகளில் பதுங்கியுள்ள புலி உறுப்பினர்கள் கைதாவர்

## பாதுகாப்பு செயலர் தெரிவிப்பு

வெளிநாடுகளில் பதுங்கியி ருக்கும் புலி உறுப்பினர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக கப்பட உள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜ பக்ச தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரகடனத்தின் அடிப்படையில் சிவப்பு எச்சரிக்கை பட்டியலில் இணைக்கப்பட்ட புலி உறுப் பினர்களை, இலங்கையிடம் ஒப்படைக்குமாறு கோரப்பட் டுள்ளது.

அடைக்கலம் பெற்றுக் கொண் டுள்ள குறித்த நாடுகளிடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளது. முக்கிய புலி உறுப்பி னர்கள் மறைந்திருக்கும் பதி னெட்டு நாடுகளுக்கு ஏற்கனவே புலனாய்வுப் பிரிவு உத்தியோ கத்தர்கள் அனுப்பி வைக்கப்பட் டுள்ளனர்.

புலி உறுப்பினர்களின் செயற் பாடுகள் குறித்து தெளிவுபடுத்தி நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. கைது செய்யப்படும் புலி உறுப்பினர்களை இலங்கை யிடம் ஒப்படைக்குமாறு கோரப்பட உள்ளது.பெரும் எண்ணிக்கையி லான புலி உறுப்பினர்கள் கன டாவில் அடைக்கலம் பெற்றுக் கொண்டுள்ளனர் என கோத் தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

## மற்றுமொரு தொலைபேசி இலக்கம்

(கொழும்பு)

சமய செயற்பாடுகள் தொடர் பான முறைப்பாடுகளை விசா ரித்து உரிய நடவடிக்கை மேற் கொள்ளும் வகையில் உருவாக் கப்பட்ட விசேட பொலிஸ் பிரி வுக்கென மற்றுமொரு புதிய தொலைபேசி இலக்கம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி ஏற்கனவே அறி விக்கப்பட்ட இரண்டு தொலை பேசி இலக்கங்களுக்கு மேலதிக மாக 011 5979999 என்ற புதிய இலக்கத்துடனும் தொடர்பு கொண்டு முறைப்பாடுகளை பதிவு செய்ய முடியும் என்று பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

# 5 இலங்கை மீனவர்கள் ஒடிசா கடற்பரப்பில் கைது



இலங்கை மீனவர்கள் 5 பேர் இந்திய கடலோர காவற்படையி னரால் கைது செய்யப்பட் டுள்ளனர்.

இந்தியாவின் ஒடிசா மாநிலம் பரடிப் கடற்கரையில் இருந்து 170 கடல் மைல் தொலைவில் வைத்து இவர்கள் கைது செய் யப்பட்டுள்ளனர்.

கடந்த 28 ஆம் திகதி கைது செய் யப்பட்ட இந்த இலங்கை மீனவர்கள் நேற்று முன்தினம் பரடிப் கரையோர பொலிஸா ரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை மீனவர்களிடம் இருந்து 2.5 தொன் மீன்களை கைப்பற்றியதாக இந்திய கட லோர காவற்படையின் துணை ஆணையாளர் ஜே.வி. போல் தெரிவித்தார்.


ஐஸ் கட்டிகள் கொண்ட கொளகலன்களில் இந்த 200 கிலோ மீன்கள் வைக்கப் பட்டிருந்ததாகவும் அவர் கூறி யுள்ளார்.

இலங்கை அரசாங்கம் வழங் கிய அடையாள அட்டைகளை இந்த மீனவர்கள் வைத்திருந் தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர் களை பரடிப் பொலிஸார் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியிருந்தனர்.


அதேவேளை கடந்த 4 ஆம் திகதி இந்திய கடல் எல் லைக்குள் வந்த இலங்கை மீன்பிடிப் படகு, இந்திய வெளி விவகார அமைச்சரின் அறிவுறுத் தலுக்கு அமைய விடுவிக்கப் பட்டதாகவும் தெரிவிக்கப்ப டுகிறது.

18)





(i) 16
(ii) 11
(iii) 20

19)





(i) 25
(ii) 35
(iii) 45

20)





(i) 32 (ii) 45 (iii) 48

21)





(i) 14 (ii) 28 (iii) 15

22)





(i) 2464 (ii) 2542 (iii) 2342

23)




(i) 6205 (ii) 6215 (iii) 6305

24)




(i) 4 (ii) 5 (iii) 6

கடந்த ஞாயிற்றுக்கிழமை மற்றும் செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களில் வெளியான பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை சனிக்கிழமை வெளியாகும்



தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - II


1 மணி 15 நிமி

# கல்வி முரசு



ஆரம்பத்தில் தரப்பட்ட உருவைப் பெற தேவையானவை எவைகள் எனக் கண்டு அவ்விடையைக் கூட்டின் கீழ் கோடிடுக.


1)



A B C D E

(i) A, B, D (ii) A, D, E (iii) A, B, C

2)




A B C D E

(i) B, D, E (ii) A, B, C (iii) C, D, B

கீழே தரப்பட்ட அமைப்பு மும்மூன்று கூட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. அதில் சரியாக பிரிக்கப்பட்ட அமைப்பின் கீழ் கோடிடுக.


3)



A B C D E F


(i) A,D,F உம் B, C,E (ii) B,C,D உம் A, E, F (iii) A,C,F உம் B,D,E

4)




A B C D E F


(i) A,D,F உம் B, C,E (ii) B,C,D உம் A, E, F (iii) A,C,F உம் B,D,E

5) 


(i) 10
(ii) 12
(iii) 14

6) 


(i) 10
(ii) 20
(iii) 30

7) 

(i) 4
(ii) 6
(iii) 9


8) 


(i) 12 (ii) 24 (iii) 36

9) 

(i) 10 (ii) 20 (iii) 30

ஆரம்ப உருவுடன் பொருந்தும் உருவின் கீழ் கோடிடுக.

10) 
(i) (ii) (iii)


11) 
(i) (ii) (iii)



12) 2233, 2323, 2332, 3223, 3232, ☐


(i) 3322 (ii) 2233 (iii) 2323

13) வட்டத்தினுள் வரும் விடை யாது?





(i) 22 (ii) 42 (iii) 21


14) புள்ளிக்கோட்டில் வரும் விடையின் கீழ் கோடிடுக.





(i) 14 (ii) 16 (iii) 18

15) 


(i) 8 (ii) 9 (iii) 10

16) 

(i) 16
(ii) 18
(iii) 20

17) 

(i) 4
(ii) 6
(iii) 8

# யாழில் கலாசார நிலையங்களை அமைத்தல் அமைச்சரின் கோரிக்கை நிறைவேற்றப்படும்

## கலை அலுவல்கள் அமைச்சர் ஏக்கநாயக்க தெரிவிப்பு



யாழ்.மாவட்டத்திலே இரண்டு கலாசார நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மேலும் பல பிரதேச செயலர் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் கலாசார நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒரு கோரிக்கையை முன்வைத்திருக்கிறார்.

நிச்சயமாக அக் கோரிக்கை நிறைவேற்றப்படுமென கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர் ரி.பி ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

மேற்படி அமைச்சின் கீழ் நாடளாவிய ரீதியில் பிரதேச செயலர் பிரிவுகள் வாரியாக அமைக்கப்பட்டு வருகின்ற கலாசார நிலையங்களில் 171 ஆவது நிலையம் கடந்த புதன்கிழமை காரை நகரில் திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த மூன்று தசாப்த காலங்களாக பல்வேறு காரணங்களால் பின்னடைவு கண்டிருந்த யாழ்.மாவட்ட கலாசார விழுமியங்களை மீண்டும் தலைநிமிரச் செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வது எமது கடமையாகும்.

இவ்வகை கலாசார நிலையங்களில் இன, மத பேதங்களின்றி கலைத்திறமைகளை வளர்த்துக் கொள்ள முடியும் நூலகம் ஒன்றும் அமைத்துத் தரப்படுகிறது. கல்வி சார்ந்த தேவைகளை அதன் மூலம் பூர்த்தி செய்துகொள்ள முடியும்.

அதேபோன்று இக் கட்டடத்தில் பாலர் பாடசாலைகளை முன்னெடுக்க முடியும். அதே போன்று சுயதொழில் முயற்சிக்கான பயிற்சிகளையும் இங்கு மேற்கொண்டு மனைப் பொருளாதாரத்தையும் மேம்படுத்திக் கொள்ள இயலும்

அந்தவகையில் இவ்விரு கலாசார நிலையங்களிலும் பனை சார்ந்த கைப்பணித்துறை பயிற்சிகளை மேற்கொள்ள உதவுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் கேட்டுக்கொள்கின்றேன்.

இக்கட்டடங்கள் மிகவும் முக்கியமானவை. எனவே இவற்றைப் பேணிப் பாதுகாத்து பயனடைவது உங்களது கடமை எனத்தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அமைச்சர் ரி.பி.ஏக்கநாயக்க, வடக்கு மாகாண ஆளுநர் சந்திரசிறி, ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) ஆகியோர் கலந்து கொண்டு கட்டடத்தை திறந்து வைத்தனர்.

நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம். ஈ.பி.டி.பி.யின் காரைநகர் இணைப்பாளர் வீ.கண்ணன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# சமூகவியல் பார்வைகள் இரு நூல்கள் வெளியிடப்பட்டன



யாழ்ப்பாணப்பல்கலைக் கழக சமூகவியற்றுறைப் பேராசிரியர் என்.சண்முகலிங்கனின் துர்க்கையின் புதியமுகம் சமூகவியற்துறை விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணனின் கிராமியம் - கல்வி - மேம்பாடு (சமூகவியல் பார்வைகள்) ஆகிய இரு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந் நிகழ்வு யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகவியற் துறை மண்டபத்தில் சமூகவியற் துறைத்தலைவர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தலைமையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

இவ் வெளியீட்டு நிகழ்வுகளுக்கு வரவேற்புரையினை - இ.வக்ஸலா அறிமுகவுரைகளினை - சு.கோபிகா, எஸ்.சதீஷ்குமார் மதிப்பீட்டுரைகளினை - இந்து நாகரீகத்துறை பேராசிரியர் க. கோபாலகிருஸ்ண ஐயர் (துர்க்கையின் புதியமுகம்) கல்வியியற்துறை விரிவரையாளர் த. கலாமணி (கிராமியம் - கல்வி - மேம்பாடு) ஆகியோர் வழங்கினார்கள். ஏற்புரையினை நூலாசிரியர் - இ.இராஜேஸ்கண்ணன் நிகழ்த்தினார். (63)

# பொன்னாலைப் பகுதியில் பட்டப்பகலில் திருட்டு

மானிப்பாய் பொன்னாலைப் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த வீட்டின் உரிமையாளர் வெளிநாட்டில் வசித்து வரும் நிலையில் உறவினர் ஒருவரிடம் இவர் தனது வீட்டை பாதுகாக்குமாறு வழங்கியுள்ளதாகவும் அவ்வீட்டை பராமரிப்பவர் அன்றைய தினம் காலை வெளியில் சென்ற சமயமே இவ்வீட்டின் முன்பக்கக் கதவு உடைக்கப்பட்டு தொலைக்காட்சிப் பெட்டி ஒன்று களவாடப்பட்டதாக வீட்டு பாதுகாவலரால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# காசோலை மோசடி வர்த்தகர் முறைப்பாடு

யாழ். நகரப்பகுதியில் உள்ள பலச்ரக்குப் பொருட்களை விற்கும் கடை உரிமையாளரினால் காசோலை மோசடி தொடர்பில் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரி வீதியிலுள்ள பல சரக்குக் கடையில் பொருட்களை வாங்கிய நபர் 6 இலட்சத்து 52 ஆயிரத்து 179 ரூபாவுக்கு காசோலையை தனக்கு வழங்கியுள்ளதாகவும் அது செல்லுபடியற்றவை எனத் தெரிய வந்துள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த கடை உரிமையாளர் தனது கடையில் வழமையாக பொருட்களை கொள்வனவு செய்யும் இன்னொரு நபரும் வழங்கிய 12 இலட்சத்து 83 ஆயிரத்து 906 ரூபாவுக்கான காசோலையும் செல்லுபடியற்றவை எனத் தெரியவந்துள்ளதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது பரவலாக காசோலை மோசடிகள் இடம்பெறுவதால் வர்த்தகர்கள் மீண்டும் மீண்டும் ஏமாறாமல் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவேண்டும் என பொலிஸார் அறிவுறுத்தியுள்ளதுடன் இம்முறைப்பாடு தொடர்பில் மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம் சின்மய மிசனின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு நல்லூர் இல. 9 செட்டித்தெரு ஒழுங்கையில் அமைந்துள்ள சின்மய ஞானவேல் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இவ் இரத்த தான நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளன. (63)

## முரசின் இன்றைய பலன்

(02.05.2014 வெள்ளிக்கிழமை)



ஐய வருஷம் சித்திரை மாதம் 19 ஆம் திகதி.
சதுர்த்தி / திருதியை மரணயோகம்
ரோகினி நட்சத்திரம். மு.ப. 11.58 வரை. பின் மிருகசீரிடம்.
இராகு காலம 10.27 - 11.57 வரை. சுபநேரம 05.57 - 7.27 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பணிச்சுமை விலக சகபாடிகள் முன்வந்து ஒத்துழைப்பு நல்குதல், உடல் நலம் மேம்படைந்து உள்ளத்தில் உற்சாகம் குடிகொள்ளும். |
| ரிஷபம் | ஆடம்பரப் பொருட்களை வாங்க வெளியூர் பணம் காலாக அமையும், காசோலைகள் திரும்பியதால் வங்கித் தொடர்பு அற்றுப்போதல். |
| மிதுனம் | பழைய ஒப்பந்தம் நட்டத்தைத் தந்ததால் புதியதை நாட மனம் ஏவாமை, அரசியல் விமர்சனத்தால் நண்பரின் சிநேகிதம் கெடல். |
| கடகம் | கௌரவம் காரணமாக அழைப்பினை ஏற்காது விடல், லீசிங் வாகனம் பறிமுதலாகும் நிலை கண்டு பதட்டமடைதல். |
| சிம்மம் | தாயாரின் உடல் நலம் அபிவிருத்தியடைந்தமையினால் துயரம் விலகுதல், ஜாதகத்தில் திசாபுத்தி கெட்டிருப்பதினால் பயண முயற்சியைக் கைவிட முடிவு. |
| கன்னி | சுபகாரியம் திடீரென ஏற்பட்டதினால் கடன்பட நண்பரை நாடுதல், அந்நிய நாட்டிலிருந்து அனுகூலச் செய்தி வந்தடைதல். |
| துலாம் | கைவிட்டிருந்த சகோதர உறவு மீண்டும் துளிர்க்க ஆரம்பித்தல், வேலைப்பளு அதிகரித்தமையினால் முடிக்க முடியாது பதகளிப்பு ஏற்படல். |
| விருச்சிகம் | அவசரம் மற்றும் ஆராய்வின்மையினால் மோசடிக்குள்ளாதல், விவாக நிமித்தம் வெளிநாட்டுக்குப் பயண முயற்சி ஏற்படல். |
| தனுசு | பசப்பு வார்த்தையைச் செவிமடுக்காததால் மோசடி ஏற்படாமை, மனைவியுடன் ஏற்பட்டிருந்த கருத்து முரண்பாடு விலகிவிடல். |
| மகரம் | நீதிமன்ற முடிவு சாதகமான பதிலைத் தந்தால் மகிழ்வு, குடும்பத்தில் புதிய ஜீவன் உருவாகும் அறிகுறி தென்படல். |
| கும்பம் | சீர்கெட்டிருந்த தேக நலம் குணமடைந்து விடுதல், குடும்பத்தில் கடந்த சில நாட்களாக நிலவியிருந்த மனத்தாங்கல் அற்றுப் போதல். |
| மீனம் | பணக்கொடுக்கல் வாங்கல் சுமுகமாக நடைபெறல், பழைய நிலுவை பெறுவதற்கு தொலைபேசி மூலம் தொடர்புகொள்ளல். |




## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ............................................
முகவரி :- ............................................
பிறந்த ஆண்டு :- ............................................
கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

............................
பெற்றோர் கையொப்பம்

# ஆண்டிபற்றிக்ஸ் மருந்துகள் செயலிழக்கும் அபாயம்

## உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை



உலகம் ஆண்டிபற்றிக்ஸ் எனப்படும் நோய் எதிர்ப்பு மருந்துகளின் காலத்துக்குப் பிந்தைய ஒரு காலத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்று உலக சுகாதார நிறுவனம் எச்சரித்திருக்கிறது.

இத்தகைய ஒரு காலகட்டத்தில், மக்கள் சாதாரண தொற்றுக்களாலும், சிறிய காயங்களாலும் உயிரிழக்கக்கூடிய ஒரு நிலை மீண்டும் வரலாம் என்றும் தெரிவிக்கின்றது.

சூப்பர் பக்ஸ் எனப்படும் நோயை உண்டாக்கும் கிருமிகள், உரு மாறி, மிகவும் சக்தி வாய்ந்த ஆண்டிபற்றிக்ஸிடமிருந்து கூட தப் பித்துக்கொள்ளும் நிலையை எட்டியிருப்பதாகவும், இது இப்போது உலக அளவில் ஒரு பெரும் அச்சுறுத்தலைத் தோற்றுவிப்பதாகவும், உலகச் சுகாதார நிறுவனம், வெளியிட்டுள்ள முதல் உலகளாவிய அறிகையில் தெரிவித்துள்ளது.

இத்தகைய நோய் எதிர்ப்பு மருந்துகளை தேவைக்கதிகமாக பரிந்துரைப்பதும், நோயாளிகள் இத்தகைய மருந்துகளை உட்கொள ளப் பரிந்துரைக்கப்பட்ட காலம் முழுவதும் உட்கொள்ளாமல் இடையில் நிறுத்துவது போன்ற, துஷ்பிரயோகங்களும் இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இந்த நோய் எதிர்ப்பு மருந்துகள் செயலிழப்பது என்பது, எதிர்பார்த்ததைவிட மிகவும் வேகமாக நடந்துகொண்டிருக்கிறது என்றும் புதிய நோய் எதிர்ப்பு மருந்துகள் விரைவாக உருவாக்கப் படவேண்டும் என்றும் இவைகள் எப்படிப் பயன்படுத்தப்படுகின்றன என்பதைப் பார்க்க, மேலும் சிறந்த கண்காணிப்பு முறைகள் அவசியம் என்று தெரிவித்துள்ளது.

# அதிக செல்வத்தை அள்ளித் தந்திடும் அட்சய திருதியை



சிறப்புமிகு சித்திரையில் வரும் அமாவாசை நாள் வந்து மூன்றாம் நாள் கொண்டாடப்படுவது அட்சயதிருதியை. அளவுக்கு அதிகமான செல்வத்தை அள்ளித்தந்திடும் இந்த அட்சய திருதியை நேற்று வியாழக்கிழமையும் இன்று வெள்ளிக்கிழமையும் அனுஷ்டிக்கப்படுகிறது.

"அட்சய" என்றால் குறையாதது என்பது பொருளாகும். அழிவின்றி வளர்ந்து ஆனந்தத்தை அள்ளித் தருகின்ற இந்த அட்சய திருதியை ஒரு விசேடமான புனித புண்ணியம் நிறைந்த திருநாளாகும். நல்ல செல்வப் பெருநாளுமாகும்.


இன்றைய இந்த மங்கள நன்னாளில் "தங்கம்" தான் வாங்கவேண்டும் என்று நியதி இல்லை. வீட்டுக்குத்தேவையான உப்பு, மஞ்சள், சீனி, அரிசி, நவதானியம் உள்ளிட்ட பல பொருள்களையும் வாங்கலாம். இன்று நாங்கள் விரும்பி வாங்கும் எநதப் பொருளும் வீட்டில் இனிதே நிறைந்து விளங்கும். இன்று ஏழைகளுக்கு உணவளித்துத் தான தர்மங்கள் செய்யலாம். அட்சய திருதியை நாளில் பசுவுக்கு உணவுபடைத்து வணங்கி வாழ்த்தினால் வீட்டில் செல்வச் செழிப்பு ஓங்கி வளரும். இன்று காத்தற்கடவுளான ஸ்ரீ மகாவிஷ்ணுவையும் செல்வத்துக்குப் பொறுப்பான குபேரனையும் வணங்கி வழிபாடியற்றினால் நற்பயன் கிட்டும்: செல்வச் செழிப்போடு வாழலாம்.

செல்வச்செழிப்பும் நோயற்ற வாழ்வும் மகிழ்ச்சி நிறைந்த மங்கள வாழ்க்கையையும் பெறவேண்டுமாயின் நாம் ஒவ்வொருவரும் இன்றைய அட்சய திருதியை நன்னாளில் கண்ணன், குபேரன், லட்சுமி ஆகியோரை வழிபாடாற்றினால் போதும செல்வம் தானாக வந்து சேரும் எனவே சைவமக்கள் அனைவரும் அட்சய திருதியையில் விஷ்ணுவை வழிபட்டு சகல ஐஸ்வரியங்களும் கிடைக்கப்பெற்று நல்வாழ்வு வாழ அவன்ருளையே நாடி நிற்போமாக.

- தெய்வத்தமிழ்ச்சுடர் இராசையா ஸ்ரீதரன்.

# நாடாளுமன்ற தேர்தலில் வாக்களித்த சந்திரபாபு நாயுடுவின் வாக்கு செல்லாது

## மாநில தேர்தல்கள் ஆணையாளர் அறிவிப்பு




நாடாளுமன்ற தேர்தல் நாடு முழுவதும் விறுவிறுப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில், நேற்று முன்தினம் ஹைதராபாத்தில வாக்களித்த தெலுங்கு தேசம் கட்சித் தலைவர் சந்திர பாபுநாயுடுவின் வாக்கு செல்லாது என மாநில தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஹைதராபாத் ஜூப்ளி ஹில்ஸ வாக்குச்சாவடிக்கு, தெலுங்குதேசம் கட்சித் தலைவர் சந்திரபாபுநாயுடு அவரது குடும்பத்தினருடன் சென்று வாக்களித்த பின் செய்தியாளர்களைச் சந்தித்த அவர், கூட்டணி காரணமாக நான் பா.ஜ.கவிற்கு வாக்களித்தேன் எனத் தெரிவித்தார்.

தேர்தல் வாக்குப்பதிவு குறித்து செய்தியாளர்களிடம் பேசிய மாநில தேர்தல்கள் ஆணையாளர பன்வர்லால், தேர்தலில் வாக்களித்தபின் ஒரு தலைவரோ அல்லது தனிநபரோ தாங்கள் யாருக்கு வாக்களித்தோம் என்பதை வெளிப்படையாக தெரிவிப்பது தேர்தல் விதிமுறைக்கு எதிரானது.

எனவே சந்திரபாபு நாயுடு தான் யாருக்கு வாக்களித்தார் என்பதை தெரியப்படுத்தியதால் அவர் பதிவு செய்த வாக்கை செல்லாத வா காக அறிவிக்கிறோம் என தெரிவித்தார்.

# சென்ரல் புகையிரத்தில் குண்டு வெடிப்பு ஒருவர் பலி; 12பேர் படுகாயம்



சென்னையின் சென்றல் புகையிரத நிலையத்தில், நேற்றுக் காலை புகையிரதத்தில் 2 வெடி குண்டுகள் தொடர்ந்து வெடித்ததில் இளம் பெண் ஒருவர் பலியாகியுள்ளார், மேலும் பலர் படுகாயம் அடைந்துள்ளனர்.

சென்ரல்புகையிரத நிலையத்தில், கவுகாத்தி - பெங்களூர் அதிவேக புகையிரம் 9ஆவது நடைமேடைக்கு வந்தபோது இந்த குண்டு வெடிப்பு சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இதில் சுவாதி(வயது-22) என்பவரே உயிரிழந்தவராவார். இவர் ஆந்திர மாநிலம் குண்டுரைச் சேர்ந்தவர் என்று தெரிய வந்துள்ளது.

மேலும் காயமடைந்த 12 பேர் சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து புகையிரத பொது மேலாளர் ராகேஷ் மிஸ்ரா கூறு கையில், வெடித்த இரு குண்டுகளும் குறைந்த சக்தி கொண்டவை என்றும் குண்டு வெடிப்பிற்கான காரணம் இது வரை தெரியவில்லை எனவும் தெரிவித்தார்.

## உலகச் செய்திகள்

# ரஷ்ய ஆயுதக்கிடங்கில் தீவிபத்து; 10 பேர் பலி

ரஷ்யாவில் ஆயுத கிடங்கில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக பத்துப் பேர் பிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ரஷ்யா லைநகர் மொஸ்கோவில் இருந்து 6.200 கி.மீ. தொலைவி ழக்கு சைபீரி ாவில் போல்யா துரா என்ற கிராமத்தி ஆயுதக் கிடங்கு உ ள்ளது.

அத அருகில் உள்ள டடில் நேற்றுமுன்தினம் திடீரென தீப்பற்றி து. இந்த தீயானது ஆயுதக்கிடங்கிற்கும் பரவியது. இதனால அந்தப் பகுதியே புகை ம டலமாக மாறியது.

ஆயுதக்கிடங்கில் தீப்பற்றியதில் ி ாடுகளில் சிக்கி 10 பேர் உயிரிழந்தனர். 17 பேர் படுகாயம் டைந்தனர்.

இதனால் அந்தப்பகுதியைச் சேர்ந்த ஆயிரம் பேர் பாதுகாப்பான இடத்துக்கு அப்புறப்படுத்தப்பட்டனர்.

# 9 ஆயிரம் சிறுவர்களை போருக்கு ஈடுபடுத்தியது தெற்கு சூடான்

## ஐ.நா. குற்றச்சாட்டு




தெற்கு சூடானில் அரச படைகளுக்கும், கிளர்ச்சியாளர்களுக்குமிடையே 4 மாத காலம் நடைபெற்ற உக்கிரமான உள்நாட்டுப் போரில் இருதரப்பிலும் சுமார் 9 ஆயிரம் சிறுவர்கள் ஈடுபடுத்தப்பட்டதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

மூன்று நாள் பயணமாக தெற்கு சூடானுக்கு சென்றுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத் தலைவர் நவநதம் பிள்ளை நேற்று முன்தினம் ஜனாதிபதி சால்வா கிர் மற்றும் புரட்சிப் படை தலைவர் ரெயிக் மச்சார் ஆகியோரை சந்தித்துப்பேசினார்.

பின்னர் அவர் நிருபர்களுக்கு பேட்டி அளிக்கும் போது, இரு தரப்பினரும் போருக்காக 9 ஆயிரம் சிறுவர்களை தேர்வு செய்தது குற்றம் என்றும், கண் மூடித்தனமாக நடத்தப்பட்ட தாக்குதலில் குழந்தைகளும் கொல்லப்பட்டதாகவும் தெரிவிததார்.

நாட்டில் நிலவும் பஞ்சம் கவலை அளிப்பதாகவும் ஆனால், இரு தலைவர்களுக்குமே அதைப் பற்றிய கவலை இல்லை என்றார். இந்த ஆண்டு இறுதியில் மேலும் பஞ்சம் அதிகரித்து மிகப்பெரிய பாதிப்பு ஏற்படும். இதற்கு நாட்டின் தலைவர்கள்தான் பொறுப்பாவார்கள். மேலும் மோதல்களை நிறுத்த ஜனவரி மாதம் இரு தலைவர்களும் ஒப்புக்கொண்டனர்.

ஆனால், அதனை அவர்கள் மீறியதுடன் ஒருவரையொருவர் குற்றம் சுமத்தி வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

# பாக்.உள்நாட்டு விவகாரத்தில் நரேந்திரமோடி தலையிடவில்லை

## விளக்குகிறது பா.ஜ.கட்சி

பாரதிய ஜனதா பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி, பாகிஸ்தானின் உள்நாட்டு விவகாரங்களில தலையிடவில்லை என அக்கட்சி விளக்கம் அளித்துள்ளது. டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் செய்தித்தொடர்பாளர் மீனாக்ஷி லேகி இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன் தேர்தல் பரப்புரையில் பேசிய நரேந்திர மோடி, மும்பை குண்டு வெடிப்பு வழக்கில் தேடப்பட்டு வரும் நிழல் உலக தாதா தாவூத் இப்ராஹிமை கைது செய்ய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து உள் துறை அமைச்சர் சுசில் குமார் ஷிண்டே வெளிப் படையாகத் தெரிவித்ததை கடுமையாக விமர்சித்தார்.

மேலும் ஒசாமா பின்லேடன் விவகாரத்தில் அமெரிக்க அரசு அப்படி நடந்து கொண்டதா? என்றும் கேள்வி எழுப்பியிருந்தார். நரேந்திர மோடியின் இந்தப் பேச்சுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள பாகிஸ்தான், மோடியின் பேச்சு, தங்கள் நாட்டின் உள்விவகாரத்தில் தலையிடுவதாக உள்ளது என்றும், இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை தோல்வி அடைந்துவிட்டதையே இது காட்டுவதாகவும் குற்றஞ்சாட்டியிருந்தது. இதற்கு பதில் அளித்துள்ள மீனாகஷி லேகி, தங்கள் நாட்டு உள் துறை அமைச்சரை விமர்சிப்பது, எவ்வாறு பாகிஸ்தான் விவகாரத்தில் தலையிடுவதாகும் என்று பாகிஸ்தானிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

# உள்ளூராட்சி அமைப்புகளுக்கு பலம்சேர்க்க செயற்றிட்டம்

சர்வதேச நகர, நாட்டு முகாமைத்துவ நிறுவனம் வடக்கில் உள்ள 34 உள்ளூராட்சி சபைகளை பலப்படுத்த முன்வந்துள்ளது.

சர்வதேச நகர முகாமைத்துவ (ஐ.சி.எம்.ஏ) திட்டமுகாமையாளர் ஜெ.ஸ்டீவ் இவ்வாறு தெரிவித்தார்.

உள்ளூராட்சி நிறுவன பலப்படுத்தல் மற்றும் உள்ளூராட்சிகளை மேன்மை உடைய நிறுவனங்களாக முன்னெடுத்தல் எனும் தலைப்பில் ஸ்டீவ் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச நகர முகாமைத்துவ நிறுவனம் வடக்கில் உள்ள 34 உள்ளூராட்சி சபைகளில் முதற்கட்ட ஆய்வுப் பணிகளை நிறை செய்துள்ளது.

இதன்பிரகாரம் ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளுக்கும் தேவையான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதன் மூலம் இனங்காணப்படும் வேலைத்திட்டங்களை இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனம், யு.எஸ். எயிட் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்த வகையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டம் கிளிநொச்சியில் உள்ள கரைச்சி பிரதேச சபையில் இருந்து ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் 5 மாதமளவில் வடக்கில் உள்ள 34 உள்ளூராட்சி சபைகளும் தமது வேண்டுதல் விடயப்பரப்பில் முன்னேற்றமடையும்.

இத்திட்டத்தினை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கான நிகழ்ச்சித் திட்டத்திற்கு வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி அனுமதியளித்துள்ளதாகவும் ஸ்டீவ் தெரிவித்தார்.

இத்திட்டங்கள் யாவும் உள்ளூராட்சி மனு சீரமைப்புக்கள் உட்பட்ட விடயமாகவும் நல்லாட்சி திட்டத்தை அடிப்படையானதாக கொண்டு அமையும். (92)

## தொடரும் தாக்குதல்கள்

அரச இணையத்தளங்கள் மீது தாக்குதல் நடாத்தி அவற்றை செயல் இழக்கச் செய்யும் நடவடிக்கைகள் தொடர்வதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாட்டின் முக்கியமான இணையத் தளங்கள் பல ஹெக் செய்யப்பட்டுள்ளதாக ஆங்கில ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது. தமிழ், சிங்கள புத்தாண்டு காலப்பகுதியில் சுமார் 129 இணையத்தளங்கள் இவ்வாறு ஹெக் செய்யப்பட்டுள்ளன.

மத்திய வங்கி, ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம், இலங்கை துறைமுக அதிகாரசபை உள்ளிட்ட முக்கிய இணையத் தளங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன. சில இணையத்தளங்களிலிருந்து தகவல்கள் களவாடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்...படுகிறது.

## யாழ். நகரில் நேற்று கூட்டுறவாளர்களின் மேதின எழுச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூட்டுறவாளர்களின் மேதினக் கூட்டம் நேற்றுக் காலை கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் தி.சுந்தரலிங்கம் தலைமையில் நேற்றுக்காலை 10 மணிக்கு இக்கூட்டம் இடம் பெற்றது.

கூட்டுறவாளர்களின் இத்தினத்தில் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் நா.கணேசன், கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாச பிரதிநிதி க.இராஜச்சந்திரன், சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் பிரதிநிதி செ. இலகுநாதன் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் பிரதிநிதி க.மகாதேவன் கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க பிரதிநிதிகளான க. சிவகுமார், எஸ். சபாரத்தினம் ஆகியோர் இதன் போது உரை நிகழ்த்தினர்.

கூட்டுறவு நிறுவனங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், தேவைகள் கூட்டுறவு அபிவிரு...கான எதிர்பார்ப்புகள் குறித்து இங்கு உரைகள் நிகழ்த்தப்பட்ட... (இ)

## வெடிகுண்டுகள் மீட்பு

யாழ்.கல்வியங்காடு இளையநாயகம் சனசமூக நிலயத்திற்கு அருகிலிருந்து வெடிகுண்டுகள் இரண்டினை நேற்று மாலை மீட்டதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் அவ்விடத்திற்கு இராணுவத்தினருடன் சென்று குறித்த குண்டுகளை மீட்டதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

### தாதியர்கள்...

டத்தை முன்னெடுத்தனர்.

எனினும் யாழ். போதனாவைத்தியசாலையின் அத்தியாவசிய சேவைகள் பாதிக்காதவகையில் அவர்களின் பணிப்புறக்கணிப்பு அமைந்திருந்ததுடன் போராட்டம் பிற்பகல்வரை நீடித்தது. சம்பள உயர்வு, மேலதிக நேர வேலைக் கொடுப்பனவுப்படிகள் உள்ளிட்ட பல் வேறு கோரிக்கைகளை முன்நிறுத்தியே இந்தப் பணிப்புறக்கணிப்பை அவர்கள் மேற்கொண்டனர். (பா, இ)

### மாவை....

தொடர்பிலும் மக்கள் எதிர் நோக்கி வரும் ஏனைய இடர்பாடுகள் தொடர்பிலும் அமைச்சர் கவனம் செலுத்தினார்.

இதனிடையே குறித்த பகுதியில் கல்லை அகழ்ந்தெடுக்கும் போது துறைசார்ந்தோர் தமக்கு உரிய அறிவித்தல்கள் வழங்கியதன் பின்னர் அதுகுறித்து ஆராய்ந்ததன் பின்னரே அதன் பணிகளை தொடர வேண்டுமெனவும் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென பிரதேச செயலருக்கும், பொலிஸாருக்கும் அமைச்சரால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அங்குள்ள பொதுக்கிணற்றை பொது இணக்கப்பாட்டுடன் எல்லா மக்களும் குடிநீருக்காக பயன்படுத்த வேண்டுமெனவும் இதற்காக எல்லோரும் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டுமெனவும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

அத்துடன், அங்கு உடனடியாக 7 குடும்பங்களுக்கு மலசலகூடங்களை அமைக்கும் வகையில் குழிகளை அமைத்துக் கொடுப்பதற்கும் இரண்டு குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கும் அமைச்சர் நடவடிக்கை முன்னெடுத்துள்ளதுடன், குழாய்க் கிணறுகளுக்கான நீர்ப்பம்பிகளை பெற்றுக் கொள்வது தொடர்பில் நீர் வளச்சபையின் உதவியைப் பெற்றுக் கொள்வது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

இந்நிலையில் அந்தப் பகுதி மக்களுக்கு காணிகள் பகிர்ந்தளிக்கப்படும் போது முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்பதுடன் அதன்பின்னரே ஏனைய வெளி மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு வழங்க வேண்டுமென அமைச்சர் துறைசார்ந்தோருக்கு பணிப்புரை விடுத்தார்.

இதனிடையே தொழிற்சாலையொன்றை நிறுவி அதனூடாக அங்கு வாழும் இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பினை வழங்குவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன், தற்போது மக்கள் குடியிருப்புப் பகுதியிலுள்ள கள்ளுத்தவறணையை அப்புறப்படுத்தி அதற்கென வேறு இடத்தில் நான்கு பரப்புக் காணியை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொண்ட அமைச்சர் பொது மக்களுடனும் கலந்துரையாடி அவர்களது தேவைகள் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது வலி.வடக்கு பிரதேச செயலர் சிறிமோகனன், ஈ.பி.டி.பியின் வலிகாமம் இணைப்பாளர் சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்), அமைச்சரின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி குகேந்திரன், ஈ.பி.டி.பியின் தெல்லிப்பளை இணைப்பாளர் ஜெயபாலசிங்கம் (அன்பு) ஆகியோர் உடனிருந்தனர்.

### தேர்தல்...

அவரை காரில் ஏற்றி வெளியேற்றினர்.

இதனிடையே முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின உரை அங்கு பிரசன்னமாகியிருந்த பலரிடமும் சர்ச்சையை ஏற்படுத்தியதாக கூறப்படுகிறது. குறிப்பாக சாவகச்சேரியில் மேதின ஏற்பாட்டை செய்திருந்த ஏற்பாட்டாளர்கள் மீது பலர் கேள்விக்கணைகளைத் தொடுத்தனர். இதனால் அங்கு குழப்ப நிலை காணப்பட்டது.

### யாழ்.நகரில்...

அத்தியாவசிய உணவுப்பொருட்களுக்கு விலைகளை அதிகரித்து, மக்களின் மீது சுமைகளை ஏற்றுவதை எதிர்த்தும், அரசாங்க, தனியார்துறை ஊழியர்களுக்கு நியாயமான சம்பளம் வழங்கக் கோரியும், மீனவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவற்புறுத்தியும், விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்குவதுடன் விளை பொருட்களுக்கு நியாயமான விலைகளை வழங்கக் கோரியும். தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வாக இலங்கைக்குள் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சுயாட்சி வழங்க வற்புறுத்தியும் வடக்கு, கிழக்கில் இராணுவ நிலைகளை அகற்றி வலி.வடக்கு உட்பட முகாம்களில் தொடர்ந்தும் முடக்கப்பட்டிருக்கும் மக்களை சொந்த இடங்களில் குடியேற்றக் கோரியும் தடுப்பு முகாம்களில் விசாரணை இன்றி தடுத்து வைக்கப்பட்ட அரசியல் கைதிகளை விடுதலை செய்ய அல்லது விசாரணை செய்ய வலியுறுத்தியும் காணாமற்போனோர் பற்றிய விபரத்தை வெளியிடக்கோரியும் வேலையற்ற பட்டதாரிகள் மற்றும் இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புகள் வழங்க வற்புறுத்தியும் தமிழ், முஸ்லிம் ஐக்கியத்தை முன்னெடுக்கக்கோரியும் இந்த மேதின ஊர்வலம் இடம்பெற்றது. (இ)

### ஆயுதக்....

அமெரிக்க அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள வருடாந்த பயங்கரவாத அமைப்புகள் தொடர்பான அறிக்கையிலேயே இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் இலங்கையில் தோற்கடிக்கப்பட்டதா... அறிவிக்கப்பட்டது.

எனினும் அவர்க... சர்வதேச வலையமைப்புகள் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கின்றன.

குறிப்பாக 2013ஆம் ஆண்டுக்குப் பின்னர் விடுதலைப் புலிகள் இயக்கம் இலகுரக ஆயுதங்களை கொள்வனவு செய்ய ஆரம்பித்திருப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அமெரிக்கா, விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிரான தடையை இந்த வருடமும் நீடித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### மன்னார்...

வரத்துச் சேவைக்கான உள்ளூர் மற்றும் வெளி மாவட்டச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், கடந்த புதன்கிழமை அதிகாலை 5 மணியிலிருந்து நண்பகல் 12 மணிவரை மன்னாரிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான பேருந்துகள் சேவையில் ஈடுபட்டன.

ஆனால், மேற்படி பேருந்துகளுக்கு யாழ். தனியார் பேருந்து தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டு, பயணிகளை ஏற்றி மீண்டும் மன்னாருக்கு வருவதற்கான அனுமதி வழங்கப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

மாறாக, யாழ். தனியார் போக்குவரத்து சங்கத்திற்குச் சொந்தமான பேருந்துகள் யாழ்ப்பாணத்திலிருந்து முழங்காவில் வரை தமது சேவைகளை மேற்கொள்கின்றன. இதனால், பயணிகள் முழங்காவிலிலிருந்து பிறிதொரு பேருந்தில் மன்னாருக்கு பயணிக்க வேண்டியுள்ளது. இந்த நிலையில், பயணிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

### சர்வாதிகாரியாக...

கூட ஒன்றிணைந்து செயற்படவும் முன்வருகின்றன. அதாவது எமது கட்சியினர் எம்மவரை வெளியேற்றப் பிற கட்சியினரை நாடுகின்றனர்.

தமிழ் பேசும் மக்களின் அரசியல் வாழ்க்கையை எடுத்துக் கொண்டோமானால் எமக்குள் ஒற்றுமையின்மையே எமது தோல்விக்குக் காரணம் என்பதை உணர்ந்து கொள்ளலாம். நாம் ஒவ்வொருவரும் ஒற்றுமை வேண்டும் என்று தான் கூறுகிறோம். ஆனால் எம்மால் ஒன்றுபட முடியாது இருக்கின்றது. இது ஏன் என்று பார்த்தோமானால் ஒவ்வொருவரும் மற்றவர்கள் தன்னுடன் ஒத்துழைக்க வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றார்கள். அதாவது நான் கூறுவது தான் சரி, நான் எண்ணுவதுதான் சரி, நான் செய்வதுதான் சரி ஆகவே மற்றவர்கள் என்னுடன் இணைந்து நடக்க வேண்டும் என்றே நினைக்கின்றார்கள். மற்றவர்கள் என்னுடன் இணைவதே ஒற்றுமை என்று எண்ணி விடுகின்றார்கள். மற்றவர்கள் கூறுவதிலும் உண்மைகள் இருக்கலாம் என்று எண்ணுவதற்கு இடமளிக்காது அவர்களின் அகந்தை. இதனால் அன்று தொடக்கம் இன்று வரை நம் கட்சி, மறு கட்சி என்றே சிந்தித்து வருகின்றோம்.

மேலும் நம் தலைவர் எதிர்த்தலைவர்கள் என்று தலைவர்களை அடையாளம் காட்டி நான் இன்னாரை ஆதரிக்கின்றேன்

நீ மற்றவரை ஆதரிக்கின்றாய். ஆகவே நீ என் எதிரி என்ற போக்கில்த்தான் நாம் செல்கின்றோம். நாங்கள் உன்னித்துக் கவனித்தோமானால் ஒவ்வொரு தலைவர் கூறுவதிலும் ஏதோ ஒரு உண்மை பொதிந்து தான் கிடக்கின்றது. ஆனால் அவை எந்த அளவு சுயநல சிந்தையுடன் கூறப்படுகின்றது, எந்தளவு பொதுமக்கள் நலனை முன் வைத்துக் கூறப்படுகின்றது என்பதில்த் தான் உண்மையான வேற்றுமை இருக்கின்றது. என்றும் தெரிவித்தார்.

எமது ஜனாதிபதியின் இன்றையதான ஜனாதிபதி வாழ்க்கை எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது ஒரு கேள்விக்குறி. இரண்டாவது அவரின் எண்ணங்களைக் கொண்டவாறே இனி வரும் அரசாங்கத்தினர் தொடர்ந்தும் பதவியில் இருப்பர் என்பது என்ன நிச்சயம்? ஒரு காலத்தில் பிரபாகரனும் கேட்பார் இன்றி அதிகாரத்துடன் செயற்பட்டார். அதை ஜனாதிபதி அறியாதவர் அல்ல. அப்படியாயிருந்தும் இப்படிப்பட்ட சவாலான கருத்துக்களை ஏன் அவர் முன்மொழிகின்றார் என்று எண்ணிப் பரிதாபப்பட்டேன்.

இந்திய அமைதிப்படை இங்கு வந்த போது ஒரு இந்தியப் படையதிகாரி என் நண்பரிடம் பின்வருமாறு கூறினாராம். "நாங்கள் இன்னும் ஒரு நூறு வருடங்களுக்கேனும் இங்கிருந்து வெளியேறமாட்டோம்" என்று சொன்னாராம். ஆனால் அடுத்த வருடமே இங்கிருந்து போக வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு அவர்கள் முகங் கொடுக்க வேண்டி வந்தது. வி.பீ.சிங் இந்தியாவின் பிரதமராகப் பதவி ஏற்றதும் 100 வருடம் இங்கு வாழவிருந்த இந்தியச் சிப்பாய்கள் கப்பல் ஏற வேண்டி வந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

# தெல்லிப்பளையில் அலுமினிய தொழிலகம் தரம் உயர்த்த நடவடிக்கை



தெல்லிப்பளையில் அமைந்துள்ள தனியார் அலுமினியத் தொழிற்சாலைக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் தொழிற்துறை நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்தறிந்து கொண்டார்.

எலிபன்ட் மெற்றல் அன்ட் அலுமினிய வேக்ஸ் என்ற தனியார் அலுமினிய தொழிற்சாலைக்கு அமைச்சர் நேற்று விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது, தொழிற்சாலையின் பல்வேறு பிரிவுகளுக்கும் சென்ற அமைச்சர் தொழிற்துறை நடவடிக்கைகள் மற்றும் உற்பத்தி, அவற்றின் சந்தை வாய்ப்பு தொடர்பிலும் துறைசார்ந்தோருடன் கலந்துரையாடி கேட்டறிந்து கொண்டார்.

இங்கு தொழிற்சாலை உரிமையாளர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக தொழிற்சாலைக்கென பிரத்தியேகமாக மின்மாற்றியொன்றை அமைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருட்களால் சுற்றுச் சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது.

எதிர்காலத்தில் தொழிற்சாலையின் தொழிற்துறை நடவடிக்கைகளை மேம்படுத்தி அதனூடாக தொழில் இல்லாதிருக்கும் ஒரு தொகுதியினருக்கு தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடரபிலும் ஏனைய விடயங்கள் தொடர்பிலும் துறைசார்ந்தோருடன் அமைச்சர் கலந்துரையாடினார்.

இதன்போது வலி. வடக்கு பிரதேச செயலர் சிறிமோகனன், ஈ.பி.டி.பியின் வலிகாமம் இணைப்பாளர் சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்), அமைச்சரின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி குகேந்திரன், ஈ.பி.டி.பியின் தெல்லிப்பளை இணைப்பாளர் ஜெயபாலசிங்கம் (அன்பு) ஆகியோர் உடனிருந்தனர்.

## அரச பொது ஊழியர் சங்கம் கல்முனையில் மே தினப் பேரணி

(கல்முனை)

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் மே தினக் கூட்டமும் பேரணியும் நேற்றுக் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது.

மே தினக் கூட்டம் கல்முனை வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் சங்கத் தலைவர் லோகநாதன் தலைமையில் நடைபெற்றதுடன், ஊர்வலத்தில் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் மாவட்டம் சார்ந்த உறுப்பினர்கள் கலந்துகொண்டு தொழிலுக்காக ஒன்றிணைந்து உரிமைப் போராட்டத்தை வெல்வோம் என்ற பதாகைகளை தாங்கியவாறு கல்முனை பொதுச்சந்தையிலிருந்து ஆரம்பமாகி கல்முனை பேருந்து நிலையம் வரை ஊர்வலம் முடிவடைந்தது.

இக்கூட்டத்தில் சங்கத் தலைவர் மற்றும் உறுப்பினர் செல்லையா இராசையா ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

சிறப்பு பேச்சாளராக சங்கத்தின் வடக்கு, கிழக்கு மாகாண பிரதித் தலைவரும் மாவட்டங்களுக்கான இணைப்பாளருமான கே.அன்ரனி, கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் ஆ.புண்ணியமூர்ததி ஆகியோர் கலந்துகொண்டனர். (140)

## திருநெல்வேலியில் அன்னதானம் ப.நோ.கூ. சங்கத்திற்கு சம்மந்தமில்லை

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி அரசடி சிவகாமசுந்தரி அம்மன் ஆலயத்தில் இன்றைய தினம் நல்லூர் ப.நோ.கூ சங்கத்தால் அன்னதான நிகழ்வு நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளபோதிலும் இதற்கும் சங்கத்திற்கும் எவ்வித தொடர்புமில்லையென சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

நல்லூர் ப.நோ.கூ சங்க நிர்வாகக் குழுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற ஒருவருக்கு ஆதரவாக அன்னதானம் வழங்கும் பேரில் சங்கத்தின் பெயர் பயன்படுத்தப்படுவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே நிர்வாகக் குழுவிலிருந்து ஊழல் மோசடிகள் புரிந்து சங்கத்தின் பெருந்தொகைப் பணத்தை வீண் விரயம் செய்து நீதிமன்றில் வழக்கு உள்ள நிலையில் மீளவும் மோசடியான வகையில் நிர்வாகக் குழுவில் போட்டியிட்டு வெற்றி பெற்று சங்கப் பணத்தை வீண் விரயமாக்கும் செயற்பாட்டிலேயே இந்த அன்னதான நிகழ்விற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

பணியாளர்கள் தமது உடலை வருத்தி உழைத்துக் கொடுக்கும் இப்பணத்தை மீளவும் வீண் விரயம் செய்யும் நடவடிக்கை சரிதானா எனவும் சங்கப் பணியாளர்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

எனவே இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## மலேசியாவில் ஹக்கீம்

தற்பொழுது மலேசியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள நீதியமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம், ஐக்கிய மலேசிய தேசிய அமைப்பு (அம்னோ) செயலாளர் நாயகமும், சமஷ்டி எல்லைப்புற அமைச்சருமான தெங்கு அத்னான் மன்சூரை கோலாலம்பூரில் உள்ள அதன் தலைமையகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

அமைச்சர்கள் இருவரும் தத்தமது நாடுகளின் அரசியல் நிலைமைகள் குறித்து ஆராய்ந்தனர். மலேசிய அமைச்சர் மன்சூர் கருத்துத் தெரிவிக்கும் போது, கடந்த வருடம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களின் பெறுபேறுகள் பற்றிக் குறிப்பிட்டதோடு, அந்தத் தேர்தல் முடிவுகள் அரசின் பல்வேறு துறைகளிலும் சீர்திருத்தங்கள் தேவையென்பதை உணர்த்தின என்றும் கூறினார்.

அத்துடன் கடுமையான சட்டங்கள் பல நீக்கப்பட்டுள்ளதோடு, நாட்டின் அரசியலில் பெரும் உந்து சக்தியாகவுள்ள இளைஞர்களுக்கு போதிய வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## துடுப்பாட்டம்

யாழ். மாவட்ட பிரதேச செயலக அணிகளுக்கிடையிலான மென்பந்து துடுப்பாட்டம் நாளையும் நாளைமறுதினமும் நடைபெறவுள்ளது.

நாளை கல்வியங்காடு ஞானபாஸ்கரா மைதானத்திலும் நாளை மறுதினம் மானிப்பாய் இந்து மைதானத்திலும் காலை 9.00 மணிக்கு இந்தப் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன. (93)

## திருவிழா

(முழங்காவில்)

பூநகரியில் பிரசித்தி பெற்ற கெட்டியகுறிச்சி சித்திவிநாயகர் ஆலய கொடியேற்றத் திருவிழா எதிர்வரும் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

10 நாட்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 14 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (112)

## பொலிஸ் அதிகாரி காயம்

(கொழும்பு)

பண்டாரவளை நகரில் நடைபெற்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மே தின கூட்டத்திற்காக நடப்பட்டிருந்த கொடிக்கம்பங்களில் ஒன்று சரிந்து விழுந்ததில் பண்டாரவளை பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியான முன்னாள் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக சிறிவர்தன காயமடைந்துள்ளார்.

அவரது நெஞ்சுப் பகுதியிலேயே கொடிக்கம்பம் விழுந்துள்ளதாக தெரிவித்த பொலிஸார், அவரை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

## வடக்கில் நேற்று மே தின எழுச்சி

வடக்கின் பல்வேறு இடங்களிலும் நேற்று வெவ்வேறு அரசியல் கட்சிகளின் ஏற்பாட்டில் மே தின நிகழ்வுகள் இடம்பெற்றபோது...

### வடமராட்சியில்...




### வவுனியாவில்...




### கிளிநொச்சியில்...



### மட்டக்களப்பில்...



## முல்லையிலும் மே தின எழுச்சி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொழிலாளர் தினம் முல்லை மாவட்ட ஜனாதிபதி இணைப்பாளரும் தனியார் பேருந்து சங்கத் தலைவருமான ச.கனகரத்தினம் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு சுனாமி நினைவு ஆலயத்தில் இருந்து மே தின ஊர்வலம் ஆரம்பமாகி மாவட்ட செயலகத்தை சென்றடைந்து பொதுக்கூட்டம் முல்லை மாவட்ட ஜனாதிபதி இணைப்பாளரும் தனியார் பேருந்து சங்கத்தலைவர் ச.கனகரத்தினம் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இதில் தனியார் பேருந்து உரிமையாளர்கள், வர்த்தக சங்க உரிமையாளர்கள், விவசாயிகள், பொதுமக்கள் என 3000 இற்கு மேற்பட்ட மக்கள் இக்கூட்டத்தில் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது. (40)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 மே 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.